

பி. ஸ்ரீ.

41. மிதிலைப் பிரவேசம்

சூரியாஸ்தமனம் ஆகவில்லை. ஜனக மஹாராஜாவின் விதேக ராஜ்யத் ற்கு ராஜதானியாகிய மிதிலை மாநகரின் கோட்டை மதில்மீது கொடிகள் றந்து கொண்டிருப்பது நன்றாகத் தெரிகிறது. அந்த அழகிய கொடிகள் காற் லே குதூகலமாக அசைந்தாடுவதைக் கண்டதும் விச்வாமித்ர மஹரிஷிக்கே தூகலந்தான். இளைஞர்களான ராம லக்ஷ்மணர்களுடைய குதூகலத்தைச் சொல்லவும் வேண்டுமா? இவர்களுடைய குதூகலத்திற்குக் காரணம், காடும் மடும், பாலையும் சோலையும், நதியும் வயல்களும் தாண்டி வந்து இந்தப் புதிய ரத்தைப் பார்க்கிறோமே என்பதுதான். முனிவனுடைய குதூகலத்திற்குக் ாரணமோ வேறு.

கொடிகளின் வரவேற்பு

'வேள்விக்காக வரவேணும்' என்று அழைத்து மணவேள்வியும் நடத்திப் ர்க்க ஆசைப் படுகிறவனல்லவா விச்வாமித்திரன்? இந்த முனிவனுடைய ந்த மனநிலையோடு கவிஞனும் அந்த மதில் - கொடிகளைப் பார்க்கிறான், ர்ணிக்கிறான் :

"மையறு மலரின் நீங்கி,
யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவள் இருந்தாள்!" என்று,
செழுமணிக் கொடிகள் என்னும்
கைகளை நீட்டி அந்தக்
கடிநகர், கமலச் செங்கண்
ஐயனை, 'ஒல்லைவா!' என்று
அழைப்பது போன்ற தம்மா!

[மையறு — குற்றமற்ற. மலர் — (இங்கே) செந்தாமரை மலர். தவத் ன் — தவத்தினால். செய்யவள் — செந்நிறமுள்ள மஹாலட்சுமி. கடி — வல். கமலம் — தாமரை மலர். ஒல்லை — சீக்கிரம். அம்மா — ஆச் யம்.]

குற்றமில்லாத அழகுவாய்ந்த செந்தாமரைப் பூவிலே கொலுவிருக்கிறாள் ஸ்ரீ தேவியாகிய மஹாலக்ஷ்மி. அவள் அந்த இயற்கைக் கோயிலைத் துறந்து மிதிலை மாநகரத்திலே குடியேறி யிருக்கிறாளாம் சீதாலக்ஷ்மியாக. "அதற்குக் காரணம் நான் செய்த மாதவம்தான்!" என்று மிதிலா நகரம் கர்வத்தோடு நினைப்பது போலத் தோன்றுகிறதாம், கம்பீரமாக நிமிர்ந்த அந்தக் கோட்டை மதில்களைப் பார்த்ததுமே.

ராமனைக் கண்டதும் அந்த நகரம், "என்னிடம் வந்திருக்கிறாள் உன்னுடைய உயிர்த் துணையான காதலி; விரைவில் வந்து விடு" என்று கை நீட்டி அவசரப் படுத்தி அழைப்பது போலிருக்கிறதாம், அந்தக் கொடிகள் இவர்களை நோக்கிப் பறந்துகொண்டிருக்கும் தோற்றம்.

குறைவில்லாத இயற்கை அழகுவாய்ந்த தன் இருப்பிடத்தை விட்டு மஹாலட்சுமியும் விரும்பி வந்து சீதா லட்சுமியாகி வீற்றிருப்பதற்கு ஏற்ற வளமும் அழகும், சிற்ப சித்திர வேலைப்பாடுகளும் நிறைந்திருப்பது மிதிலா பட்டணம் என்பது குறிப்பு.

"விரைந்து வந்து சீதையை மணம் செய்துகொள்" என்று மதில், கொடிகள் மகிழ்ந்து வரவேற்க, ராமன் தம்பியோடும் முனிவரோடும் நகரத்திற்குள் பிரவேசிக்கிறான். கோட்டை வாசல் வழியாக உள்ளேபோனதும் அழகும் வேலைப்பாடுகளும் நிரம்பிய எத்தனையோ மாடமாளிகைகளைப் பார்க்கிறான். அந்த உப்பரிகை வீடுகளின் மேலேதான் எத்தனை மணிக்கொடிகள் வரிசை வரிசையாகக் காற்றிலே உல்லாஸமாக ஆடுகின்றன!

ஆனால் இந்தக் கொடிகள் கைநீட்டி அழைப்பதுபோல் நீண்டு பறந்து கொண்டிருக்கவில்லையாம். பல நிறமுள்ள இக் கொடிகள் நாட்டியம் ஆடுவதுபோல் ஆடுகின்றனவாம், வீசுகின்ற காற்றின் போக்கிற்குத் தக்கபடி யெல்லாம்.

மாப்பிள்ளையைக் கண்ட குதூகலந்தான் இந்த ஆட்டங்களுக்குக் காரணமாம் :

நிரம்பிய மாடத்(து) உம்பர்
நிரைமணிக் கொடிக ளெல்லாம்,
"தரம்பிறர் இன்மை உன்னித்
தருமமே தூது செல்ல,
வரம்பில்பே ரழகி னாளை
மணஞ்செய்வான் வருகின் றான்"என்(று)
அரம்பையர் விசும்பின் ஆடும்
ஆடலின் ஆடக் கண்டார்.

145

[நிரம்பிய — (அழகுகள்) நிறைந்த. மாடத்து உம்பர் — மாடமாளிகைகளின் மேல். நிரை — வரிசை. தரம் — தகுதி. உன்னி — நினைத்து. வரம்பில் — வரம்பில்லாத; எல்லை இல்லாத. அரம்பையர் — தேவ மாதர்கள். விசும்பின் — ஆகாசத்திலே. ஆடலின் — ஆட்டம்போலே.]

இந்த மணிக் கொடிகள் ஆடுவது தேவ ரம்பைகள் ஆகாசத்திலே ஆடுவது போல் இருக்கிறதாம். "சீதையைக் கல்யாணம் செய்துகொள்ள

மனைத் தவிர வேறு யார்தான் தரம்? சீதையோ வரம்பில்லாத பேரழகி, மனோ அந்தமில் பேரழகன்!" என்ற ஆனந்தத்தினாலேதான் தெய்வப் பன்கள் அப்படி ஆடுகிறார்களோ? — என்று தோன்றுகிறதாம்.

இவ்வளவு தூரம் ஒத்த சிறப்பு வாய்ந்த தலைவன் தலைவியர் மணம் புரிவது நியமம்தானே? உருவிலும் திருவிலும், குலத்திலும் குணத்திலும் என்ன பொருத்தம்! இவர்களை ஒருவரை ஒருவர் காதலித்து மணம் செய்து கொள்ளப் போகிறார்கள் — என்பது கம்பன் கதை. இத்தகைய காதல் மணத்தைக் கூட்டி முடிப்பதற்குத் தூது சென்றதாம் ஸாக்ஷாத் தருமம். ஆம்; விச்வாமித்திர மஹரிஷியே திருமணத் தூதர் என்றால், தருமமே அந்த ரூபத்தில் போய் மாப்பிள்ளையை அழைத்து வருவதாக நம்பக்கூடு மல்லவா?

கோட்டை மதில்கொடிகள் குதூகலமாய் வரவேற்க, மாளிகைக் கொடி வியந்து நடம் புரிய, ராம லட்சுமணரும் விச்வாமித்திரனும் மிதிலை வீதியில் பிரவேசிக்கிறார்கள். சூரிய கிரணங்களை மறைத்து வெண்ணிறக் கொடிச் சீலைகள், "அதோ பாற்கடல் வானத்திலே!" என்று சொல்லும்படி பரப் பறந்து கொண்டிருக்கின்றன. அவை அவ்வளவு மிகுதியாகவும் —ர்த்தியாகவும் வானளாவிப் பறக்கின்றன.

115

நகர அமைப்பு

'வரம்பில் பேரழகி'யைத் தந்த மிதிலை பொன்மயமான மதில்களால் சூழப் பெற்று, இயற்கை அழகும் செயற்கை அழகும் ஒருங்கே குடிகொள்ளும் ஓர் அபூர்வமான செந்தாமரை மலர் போல் மலர்ச்சி பெற்று விளங்குகிறதாம்:

ஆதரித்(து) அமுதில் கோல்தோய்த்(து),
அவயவம் அமைக்கும் தன்மை
யாதெனத் திகைக்கும் அல்லால்
மதனற்கும் எழுத ஒண்ணுச்
சிதையைத் தருத லாலே,
திருமகள் இருந்த செய்ய
போதெனப் பொலிந்து தோன்றும்
பொன்மதில் மிதிலை புக்கார்.

[ஆதரித்து — அன்பு, ஆசை, விச்வாசம், ஏகாக்ரசித்தம் முதலிய அம்சங்களோடு கூடிய விருப்பத்துடன். கோல் — எழுதுகோல். . மதனன் — மன்மதன். செய்ய — சிவந்த. போது — தாமரை மலர்.]

செந்தாமரைப் பெண்ணாகிய ஸ்ரீதாலக்ஷ்மியைத் தந்த மிதிலா பட்டணமும் செந்தாமரை மலர் போல் அமைக்கப் பட்டிருக்கிறது என்பது குறிப்பு. சிறிது தூரத்தில் இருந்து பார்க்கும் போதே அந்தப் பொன் மதில்களின் அமைப்பு செந்தாமரையை ஞாபகப்படுத்தி விடுகிறதாம்.

இத்தகைய அழகு வாய்ந்த நகரத்தில் வசிக்கும் அழகியின் அழகை என்னென்பது? அழகின் தன்மையை வரையறுத்து உணர்ந்த காதற் கடவுளான மன்மதனும் எழுதிப் பார்க்க முடியாத கட்டழகி என்கிறான் கவிஞன்.


மன்மதன் அழகைச் சித்திரித்துக் காட்டுவதிலும் மஹா நிபுணனும். அந்த மன்மத ஓவியன் ஒரு சமயம் சீதையின் வடிவத்தைச் சித்திரத்தில் அமைத்துப் பார்க்க விரும்பினானும். எழுதுகோலை எடுத்துக் கொண்டான். தக்க வர்ணப் பொருள் வேண்டுமே என்று சிந்தித்து, தேவாமிர்தமே இந்த அழகைச் சித்திரிப்பதற்குத் தகுதி வாய்ந்தது என்று தீர்மானித்தானும்.

தேவாமிர்தத்திலே எழுதுகோலைத் தோய்த்தான். தன் உள்ளத்தில் இருந்த ஓவிய மேதாவிலாஸத்தை அப்படியே 'விளாசி' விடுவதென்று தீர்மானித்தான். எழுதி முடித்தானு சித்திரத்தை ?

எழுதத் தொடங்கவே இல்லையாம். அந்த அவயவம் ஒன்றைக் கூடச் சரிவர எழுத முடிய வில்லையாம். "அவயவம் அமைக்கும் தன்மை யாது ?" என்றே திகைத்துப் போய் விட்டானும், திகைத்துத் திகைத்து, ஆலோசிக்க ஆலோசிக்க, வர்ண மை உலர்ந்து போவதும், மீண்டும் மீண்டும் எழுதுகோலைப் பக்குவமாக்கிக் கொள்வதுமே வேலையாகப் போய் விட்டனவாம்.

வீதி வழியே

இப்பேர்ப்பட்ட 'வரம்பில் பேரழகி'யைத் தந்த மிதிலாபட்டணத்தின் அழகு நிறைந்த ராஜ வீதி வழியே மூவரும் போகிறார்கள். அந்த வீதிகளில் மதோன்மத்தமாகச் செல்லும் யானைகளைப் பார்க்கிறார்கள். கடிவாளம் பூண்ட குதிரைகள் வாய்நுரை கக்க ஓடுவதைப் பார்க்கிறார்கள். ரதங்கள் இடைவிடாது ஓடிக் கொண்டிருப்பதையும் பார்க்கிறார்கள். பெண்கள் கழற்றி எறிந்த பூமாலைகள் அந்தப் பெரிய வீதிகளில் வண்டு மொய்க்கக் கிடப்பதையும் பார்த்துக் கொண்டே போகிறார்கள்.



பி. ஸ்ரீ.

42. கண் விருந்தும் செவி விருந்தும்

“அதோ யானைச் சண்டை! வயிரம்போல் உறுதியான தந்தங்களோடு கூடிய யானைகள் எவ்வளவு உக்கிரமாகச் சண்டை போடுகின்றன! மலையோடு மலை மோதுவது போல் இருக்கிறதே!” என்று எண்ணிய ராம லட்சுமணர்கள் நெருங்கி வந்து பார்த்ததும், “இவ்வளவுதானா? என்ன விநோதமான போர்!” என்று கொஞ்சம் அதிசயப்பட்டார்கள்:

உயிர்உறு காத லாரின்
 ஒன்றைஒன்(று) ஒருவ கில்லா
செயிர்உறு மனத்த ஆகித்
 தீத்திரள் செங்கண் சிந்த
வயிரவால் மருப்பு யானை
 மலைஎன மலைவ கண்டார்.

[உயிர் உறு—உயிரை ஒத்த. காதலாரின்—காதலர் போல. ஒருவகில்லா—விட்டு நீங்காதனவாய். செயிர்—கோபம். வால் மருப்பு—வெண்ணிறமான தந்தம். மலைவ—போர் புரிவன.]

யானைகளின் செல்லச் சண்டை

ஸ்தூலமாகப் பார்த்தால், அந்த யானைகள் கோபத்தோடு வயிரம் போன்ற தந்தங்களால் ஒன்றை ஒன்று குத்திப் போர் செய்வதுபோல மோதுகின்றனவாம். கவனித்துப் பார்த்தால், செல்லச் சண்டைதான்,—காதலர்களின் செல்லச் சண்டைபோலே! ஒன்றை ஒன்று விட்டு நீங்க இஷ்டமில்லாமல்தான் அப்படி விநோதமாக முட்டி மோதிக்கொண் டிருக்கின்றனவாம்.

யானைகள் போர் புரிவதையும் இப்படி ஒரு காதல் - காட்சியாகக் காட்டுவது, மிதிலா பட்டணத்தைக் கவிஞன் ஒரு காதற் - பூஞ்சோலையாகச் சித்திரிக்கப் போகிறான் என்பதற்கு ஒரு முற்குறிதான்.

குதிரைகள் சுழன்றோடும் காட்சி

வேறொரு பக்கத்திலே குதிரைகள் மண்டல கதியில் சுழன்றோடும் காட்சி கண்ணைக் கவர்கிறது. இடையிடையே நிற்காமலும், வழியைவிட்டு விலகாமலு எவ்வளவு ஒழுங்காய்ச் செல்லுகின்றன ! எத்தனையோ உபமானங்கள்—தா கள் கண்டதும் கேட்டதும்—ஞாபகத்திலே பாய்ந்து வருகின்றன ராம லட் மணர்களுக்கு :

கொட்புறு கலினப் பாய்மா,
குலால்மகன் முடுக்கி விட்ட
மட்கலத் திகிரி போல,
வாளியின் வருவ, மேலோர்
நட்பினின் இடைஅறுவாய்,
ஞானிகள் உணர்வின் ஒன்றாய்க், 148
கட்புலத்(து) இனைய என்று
தெரிவில, தெரியக் கண்டார்.

[கொட்பு—சுழன்று ஓ தல். கலினம்—கடிவாள பாய்மா—பாய்ந்து செல்லு குதிரை. குலால் மகன்—



குயவன். மட்கலம் — மண்ணால் செய்யும் பாத்திரங்கள். திகிரி — சக்கரம். வாளி — அம்பு. நட்பினின் — நட்பைப்போல. கட்புலம் — கண்ணின் பார்வை. தெரிவில — தெரியக் கூடாதன.]

மண்பாண்டங்கள் செய்யும்போது குயவன் முடுக்கி விடுகிறானல்லவா சக்கரத்தை? அப்படிச் சுழன்ற கோணமிருப்பதுபோல முதல் முதல் தோன்றிய குதிரைக் கூட்டம், கொஞ்சம் நெருங்கிப் பார்க்கையில், நேராகப் பாயவேண்டிய அம்புகள் சுழன்று சுழன்று பாய்வது போலத் தோன்றுகிறதாம்.

குதிரை ஒவ்வொரு சமயத்திலே ஒவ்வோர் இடத்தில் இருந்தாலும், கதியின் வேகத்தினாலே இடையறாது காணப் படுகிறதாம். "மேலோர்களின் நட்பும் இப்படியே எந்த இடங்களிலும் இடையறாமல் இருக்கிறதல்லவா?" என்று தோன்றுகிறதாம் பார்க்கிறவர்களுக்கு. ஞானிகளின் உணர்வும் இப்படித்தானே! "ஒன்றாகக் காண்பதே காட்சி!" என்று சொல்லத்தக்க அந்த மெய்ஞ்ஞானிகளின் வேதாந்த மனோபாவக் காட்சியும் ஞாபகத்திற்கு வரக்கூடியதுதானே விச்வாமித்திரனுக்கு?



இப்படி எண்ணிக் கொண்டிருக்கும்போதே வேகம் படுவேகமாகிறது. குதிரை ஒவ்வொன்றாயிருந்தும் அதன் அதன் ஓட்டம் பல இடங்களிலும் ஒருங்கே காண்பது போலிருக்கிறதாம். இனி, "இந்த ஓட்டம் இத்தன்மையது என்று உபமானம்சொல்லவும் முடியவில்லையாம்" ராம லட்சுமண விச்வாமித்திரர்களுக்குங்கூட.

கடைத் தெருவிலே

இப்படி யானைச் சண்டைகளையும், குதிரை ஓட்டங்களையும் பார்த்துக் கொண்டே கடைத்தெரு வழியாக வருகிறார்கள்:

வரப்பறு மணியும், பொன்னும்,
 ஆரமும், கவரி வாலும்
சுரத்திடை அகிலும், மஞ்ஞைத்
 தோகையும், தும்பிக் கொம்பும்,
குரப்பணை நிரப்பும் மள்ளர்
 குவிப்புறக் கரைகள் தோறும்
பரப்பிய பொன்னி அன்ன
 ஆவணம் பலவும் கண்டார்.

149

[வரம்பறு — வரம்பு அறு — அளவில்லாத. மணி — இரத்தினங்கள். ஆரம் — முத்து. கவரி — ஒருவகை மான். சூத்திடை — காடுகளிலே. மஞ்ஞைத் தோகை — மயில் - பீலிகள். தும்பிக்கொம்பு — யானைத் தந்தம். குரப்பணை — (குரம்பு - அணை) வரப்புக் [illegible] மள்ளர் — உழவர். பொன்னி — காவிரி நதி. ஆவணம் — கடைகள்.]

கடைத் தெருக்களிலே ரத்தினங்களையும், பொன்னையும், முத்துக்களையும் குவித்துக் கொண்டு வியாபாரம் செய்கிறார்களாம் ஒருபுறம். வேறொரு பக்கத்தில் கவரிமான் வாலும், அகில் - கட்டைகளும், மயில் பீலிகளும், யானைத் தந்தங்களும் குவியல் குவியலாகக் கிடக்கின்றனவாம். இந்தக் காட்சி, கவிஞருக்குக் காவேரிக் கரையிலே அந்த நதி கொழித்துக் கொணரும் பொருள்களை உழவர்கள் தனித் தனியாகப் பக்கங்களில் குவித்து வைப்பதை ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறதாம். ஆம்: கவிஞன் காணும் கற்பனை - மிதிலையோடு போட்டி போடுகிறது கண்முன் காணும் சொந்தப் பிரதேசமாகிய காவேரி தீரமும்!

நடனக் காட்சி

வாணிப வளம் மட்டுமா? கலை வளமும் கொழிக்கிறது மிதிலை மாநகரத்திலே. அயோத்தி மாநகரம் போல் மிதிலையும் நடன சாலைகளுக்குப் பேர் போனது.

கண்விருந்தான அந்த நடனங்களையும் மூவரும் பார்த்துக் கொண்டே போகிறார்கள்:

நெய்திரள் நரம்பின் தந்த
    பழுலையின் இயன்ற பாடல்,
தைவரு மகர வீணை
    தண்ணுமை தழுவித் தூங்கக்,
கைவழி நயனம் செல்லக்,
    கண்வழி மனமும் செல்ல, 150
ஐயநுண் இடையார் ஆடும்
    ஆடக அரங்கு கண்டார்.

[நெய்திரள் நரம்பு — நெய்யின் ஒழுக்குப் போல் திரண்ட நரம்பு. மழலையின் — மழலைச் சொல்லைப் போல். தைவரு — தடவுகிற. தண்ணுமை — மத்தளம். தூங்க — ஒலிக்க. ஐய நுண் இடை — (உண்டோ, இல்லையோ? — என்று சந்தேகிக்கும்படி அவ்வளவு) நுட்பமான இடை. ஆடகம் — பொன். அரங்கு — நடனசாலை.]

வீணை கானத்திற்கும் மத்தளத்திற்கும் இசைய வாய்ப்பாட்டு; அந்தப் பாட்டின் பொருளுக்கும் இசைக்கும் இசைய அபிநயம். அபிநயிக்கும் கை வழியே கண் செல்லுகிறதாம்; கண் வழியே மனம் செல்லுகிறதாம்.

கைவழி நயனம் செல்லக்
    கண்வழி மனமும் செல்ல, —

ஆடுகிறாள் என்று எவ்வளவு அபூர்வ எளிமையோடு அந்த அபூர்வ நடனம் வர்ணிக்கப்படுகிறது!

மனம் தான், அபிநயம் காட்டக் கைகளையும் செலுத்திக் கை வழியே கண்ணையும் செலுத்திக் கண் வழியே தானும் செல்லுகிறது. எனினும் காதிலே பாட்டு விழுந்ததும் பளிச்சென்று கைகள் அபிநயம் பிடிக்கின்றனவாம், அந்தப் பாட்டுக்கு இசைய: அவ்வளவு பயிற்சி. புற மனத்தின் சம்பந்தமில்லாமல் அகமனத்தின் ஆழத்திலிருந்தே அந்த ஆட்டங்களும் அபிநயங்களும் பிறக்கின்றனவாம்.

சங்கீத விருந்து

கண் விருந்தோடு செவிக்கும் விருந்துகள்;

வள்ளுகிர்த் தளிர்க்கை நோவ,
மாடகம் பற்றி வார்ந்த
கள்ளென நரம்பு வீக்கிக்
கையொடு மனமும் கூட்டி,
வெள்ளிய முறுவல் தோன்ற,
விருந்தென மகளிர் ஈந்த
தெள்விளிப் பாணித் தீந்தேன்
செவி மடுத்(து), இனிதுசென்றார்.

[வள் உகிர் — வலிய நகங்கள். தளிர்க்கை — தளிர்போன்ற கை; (இங்கே) கை விரல்கள். மாடகம் — வீணையின் முறுக்காணி. வார்ந்த — ஒழுகிய. கள் — (இங்கே) தேன் தாரை. வீக்கி — கட்டி. வெள்ளிய — வெண்ணிறமான. முறுவல் — புன்சிரிப்பு. தெள் — தெளிவான. விளி — இசை. பாணி — பாட்டு. மடுத்து — உண்டு; ஊட்டி.]

வீட்டுக்குள்ளே பெண்கள் வீணாகானம் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த இசைத் தேனைக் காது நிறையத் தேக்கிப் பருகிக்கொண்டே இன்பமாகச் செல்கிறார்கள் ராமன் முதலானோர். இப்படி இசைவிருந்து செய்யும் அந்தப் பெண்களை அவர்கள் பார்க்கவில்லை; அந்த விருந்தைத்தான் அனுபவித்துக் கொண்டே வீதி வழியாகப் போகிறார்கள்.

ஆனால் நாம் பார்க்கிறோம் அந்த முகங்களை வெண்ணிறமான புன்சிரிப்பாகிய மந்தஹாஸத்தோடும்! அந்தத் தளிர்போன்ற கைகளையும் பார்க்கிறோம், அந்தக் கைகளிலுள்ள கூர்மையான நகங்களோடும் கூட! வீணையின் முறுக்காணிகளைப் பிடித்துத் திருகி, வீணை நரம்புகளை இறுகக் கட்டி அவற்றின்மீது படர்ந்து செல்லும் அந்தச் செந்தளிர்போன்ற கை விரல்கள் நோகுமே! — என்ற அனுதாப உணர்ச்சிகூட நமக்குக் கொஞ்சம் ஏற்படத்தான் செய்கிறது.

ஆனால் அந்தத் தேர்ந்த கை விரல்களோ சிரமம் இல்லாமலே மனோவேகமாய் - மனம் படர்வது போலவே - படர்ந்து சென்று உல்லாசமாக இசைத் தேன் பொழிந்த வண்ணமாயிருக்கின்றன. அந்த இசை விருந்தினால் விச்வாமித்திர ராம லட்சுமணர்களுக்கு வழி நடந்த களைப்புத் தீர்ந்து பசியும் தீர்ந்து போகிறதாம்.



பி. ஸ்ரீ.

43. ஊஞ்சலும் பந்தாட்டமும்

'மிதிலா பட்டணத்து நெடுந் தெருக்களுக்கு அழகு தருகின்றன பூஞ் …லைகள். அழகு மட்டுமா? ஆரோக்கியமும் தருகின்றன பட்டணத்திற்கு …சுப் பைகள் போல் அமைந்திருக்கும் அந்தப் பூங்காவனங்கள்.

கமுகு பூண்ட ஊஞ்சல்

அத்தகைய ஒரு பூங்காவனத்திற்கு ஒரு தனி அழகு தருகின்றன 'பவ… செங்காய் மரகதக் கமுகு'கள். கமுக மரங்களை அழகு செய்கின்றன, … மரங்களுக்கு இடையே அமைந்திருக்கும் சில ஊஞ்சல்கள்.

அந்த ஊஞ்சல்களைக் கவிஞன், "பவளச் செங்காய் மரகதக் கமுகு …ட ஊசல்" என்று குறிப்பிடுகிறான். அந்த அழகிய கமுக மரங்கள் தங்களை …ணி செய்து கொண்டிருக்கின்றனவாம் அந்த ஊஞ்சல்களைக் கொண்டு; ஆம், …ரணமாகப் பூண்டு மகிழ்கின்றனவாம். "கமுகில் பூண்ட" என்று சொல்…மல் "கமுகு பூண்ட" என்று சொல்வது கவனிக்கத் தக்கது.

ஊஞ்சல் பூண்ட பெண்மணிகள்

ஆம்; பவளம் போன்ற செங்காயோடு விளங்கும் மரகத நிறமான பாக்கு …ம், பெண்கள் வீற்றிருந்து ஆடும் ஊஞ்சலைத் தன் அழகுக்கு இசைந்ததோர் …ணியாகப் பூண்டு விளங்குகிறதாம். அந்தப் பெண்களோ 'பெண்மைக்கே …ரணம்' என்று சொல்லத் தக்க அழகு வாய்ந்தவர்கள். அந்த ஊஞ்சல்க…யும், ஊஞ்சல் ஆடும் பெண்மணிகளையும் விசுவாமித்திர ராம லக்ஷ்மணர் … பார்த்துக் கொண்டே போகிறார்கள். ஆனால் நாம் நின்று பார்க்க வேண்…தான் அந்த அழகுக் காட்சியை;

பூசலின் எழுந்த வண்டு
மருங்கினுக்(கு) இரங்கிப் பொங்க,
மாசுறு பிறவி போல
வருவது போவ தாகிக்,
காசறு பவளச் செங்காய்
மரகதக் கமுகு பூண்ட
ஊசலின், மகளிர் மைந்தர்
சிந்தையோ(டு) உலவக் கண்டார்.

[…சல் — ஆரவாரம். மருங்கு — இடை. மாசுறு — மாசு மிகுந்த. … — குற்றமற்ற. மைந்தர் — ஆடவர்.]



ஊஞ்சல் - காட்சிய
காதல் - காட்சியா

ஊஞ்சல்களை அல
ரிக்கும் பெண்களின் மே
யை அணிசெய்கின்றன பூ
களும் பூமாலைகளும். அ
கள் ஊஞ்சலாடும்போ
அந்தப் பூக்களில் மொ
திருந்த வண்டுகள் மே
மூந்து ரீங்காரம் செய்கி
றனவாம் ஆட்டத்தின் அ
ச்சியிலே. ஆம்; ஆட்
விசையாட்டம் ஆகிறது.

அந்த ஆட்டத்தைப் பா
துக்கொண்டிருந்த ஆடவ
ளில் சிலர், "இப்பெண்
ளின் மெல்லிய இடை வி
யாட்டத்தைப் பொறுக்
மாட்டாது!—என்று தா
வண்டுகளும் இரங்கி வ
விட்டு அரற்றுகின்றன
என்றெல்லாம் கவலை ய
கிறார்களாம். ஏன் இ
வேண்டாத கவலை ெ
லாம்? அந்த ஆடவர்க
வண்டுகளின் கீதத்திலும்
கள் ஹிருதய சோகத்தை
கேட்கிறார்கள். இப்ப
அந்த ஊஞ்சல் - காட்சி
ருக்கு ஒரு காதல்-நாடகமு
ஆகி விடுகிறது! இவர்களு
நாடக பாத்திரமாகி வி
கிறார்கள்.

தங்கள் ஹிருதய ஊ
லிலே கொலு வீற்றிரு
ஆட்டிவைக்க வேண்டி
வர்கள் அதோ அந்த ஊஞ
லில் வீற்றிருந்து ஆடுகி
களே!—என்று அந்த வி
தையை நோக்கிய கண்க
செயலற்று இமைகொட்டாது நோக்கிய வண்ணமாய் இருக்க, மனம் என்
பாடுபடுகிறது; என்ன பாடுபடுத்துகிறது! மகளிர் ஊஞ்சலாடுகிறார்; மைந்தர் ம
மும் ஊஞ்சலாடுகிறது. ஊஞ்சலோடு ஓடும் மனம் ஊஞ்சலோடுதான் உலவி
கொண்டிருக்கிறது அப்படியும் இப்படியுமாக; திரும்பி வந்து சேர்ந்தபாடில்லை

என்ன காதல்! என்ன வேதாந்தம்!

இந்தக் காதல் - கட்சியிலேயே ஒரு வேதாந்த பாடமும் கற்பிக்கிறான் கவிஞன். ஊஞ்சல் எப்படி வருகிறது, போகிறது? மனத்தைப் பறிகொடுத்த இந்த மைந்தர்களின் கண்களைக் கொண்டு இப்போது பார்க்க வேண்டாம். இளமை - வெள்ளத்திலே மிதந்து செல்லும் ராம லட்சுமணர்களின் கண்களைக் கொண்டும் பார்க்க வேண்டாம். தபஸ்வியாகிய விசுவாமித்திரரின் கண்களாலும் ஒரு க்ஷணம் பார்ப்போம். அப்போதுதான்,

மாசுறு பிறவி போல
வருவது போவ தாகி—

—என்ற வர்ணனை இனிது புலனாகும். என்ன ஊஞ்சல்! என்ன காதல்! என்ன வேதாந்தம்!

ராம லட்சுமணர்கள் இந்த ஊஞ்சல் - காட்சியை ஒரு வேதாந்தக் காட்சியாகவும் பார்க்கவில்லை; காதல் - காட்சியாகவும் பார்க்கவில்லை. இவர்களுக்கு அது மிதிலா பட்டணத்தின் எத்தனையோ கண்விருந்துகளில் ஒன்றுதான்.

பந்தாடும் சுந்தரிகள்

வேறொரு இடத்தில் வேறொரு கண்விருந்து. பெண்கள் பந்தாடுகிறார்கள். நாம் இந்நாளில் பார்க்கும் பந்தாட்டம் போன்றதல்ல. பாருங்கள் கம்பன் - வர்ணனை மூலமாக இந்தப் பந்தாட்டத்தை:

மைஅரி நெடுங்கண் நோக்கம்
படுதலும் கருகி வந்து,
கைபுகின் சிவந்து காட்டும்
கந்துகம் பலவும் கண்டார்.

[மை — அஞ்சனம். அரி நெடுங்கண் — செவ்வரி படர்ந்த நீண்ட கண்கள். கந்துகம் — பந்து.]

பந்துகளை வீசி வீசி எறிந்து எறிந்து கைகளால் பிடிக்கிறார்கள். பிடித்துப் பிடித்து மறுபடியும் வீசுகிறார்கள். இப்படியெல்லாம் வீசிப் பிடிக்கும் அந்தப் பந்துகளைப் பந்தாடும் சுந்தரிகளின் கண்கள் எவ்வளவு ஆவலாய்த் தொடர்கின்றன!

அப்படிக் கண் பார்வை தொடர்வதினாலும், கைகள் பிடித்துக் கொள்வதினாலும், அந்த ஆட்டத்தைப் பார்ப்பவர்களுக்குப் பந்துகளின் இயல்பான நிறமே தெரிவதில்லையாம். அஞ்சனம் தீட்டிய கண்கள் தொடரும்போது, அந்த நீண்ட பார்வையால் கருநிறமடைந்ததுபோலக் காண்கின்றனவாம் பந்துகள். அந்த அழகிகளின் கைக்கு வந்ததும் அந்தப் பந்துகள் "இவற்றின் நிறம் சிவப்பே!" என்று சொல்லும்படி மாறிவிடுகின்றனவாம்.

அந்தப் பந்துகள்! பளிங்குபோல இந்தப் பெண்களின் கரிய கண்



களையும், சிவந்த கைகளையும் பிரதிபலித்துக் காட்டுகின்றன என்று வர்ணிக்கும் இந்தக் காட்சியையும் ஒரு வகையில் காதல்-காட்சி என்றே சொல்லலாம். பெண்களின் மெய்யழகிலும் கண் அழகிலும், பந்துகளின் நிறமும் அழகும் மறைந்து போகின்றனவே! — என்பது போன்ற அதிசயங்களெல்லாம் காதலர்களுக்குத் தானே புலனாகும்? பந்து படும் பாடு படுகிறவர்களல்லவா?

சாளரந் தோறும் சந்திரோதயம்

இத்தகைய கண் விருந்துகள் ஒருபுறம் இருக்கட்டும். மிதிலைப் பெண்களின் முகங்களே கண் விருந்துதான்! ஆட வேண்டாம், பாட வேண்டாம், பந்தாட வேண்டாம், ஊஞ்சலாட வேண்டாம்! மாளிகை முகப்பிலுள்ள ஜன்னல் வழியாக அவர்கள் வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதுமே, "பகலிலும் சந்திரோதயம்" என்று சொல்லும்படி :

வாளரம் பொருத வேலும்,
மன்மதன் சிலையும், வண்டின்
கேளொடு கிடந்த நீலச்
சுருளும், செங் கிடையும் கொண்டு,
நீளிருங் களங்கம் நீக்கி,
நிரைமணி மாட நெற்றிச்
சாளரந் தோறும் தோன்றும்
சந்திர உதயம் கண்டார்!

[வாள் அரம் — ஒளியுள்ள அரம் என்ற ஆயுதம். பொருத — அராவப்பட்ட. சிலை — வில். கேள் — உறவு; இனம். கிடந்த — பொருந்திய. செங்கிடை — சிவந்த கிடைச்சு. இருங்களங்கம்—பெரிய களங்கம். நிரை — வரிசை. மணி மாடம் — அழகிய உபரிகை வீடுகள். நெற்றி — மேலிடம்.]

"ஆஹா, என்ன அதிசயமான சந்திரோதயம்! சிறிதும் ஒளி மழுங்காத, அழகு குன்றாத, ஜீவகளை மிகுந்த சந்திரன்!" என்றெல்லாம் எண்ணத் தோன்றுகிறதாம். "இந்த ஊரிலே ஒரு சந்திரனா? எத்தனையோ சந்திரர்கள்! வீடுதோறும் சந்திரோதயம், வீதிதோறும் சந்திரோதயங்கள்!" என்றெல்லாம் திகைக்கச் செய்கிறது, பிரமிக்கச் செய்கிறது, அந்த முகங்களின் தோற்றம்.

அந்த முக சந்திரர்களை எடுத்துக் காட்டுகிறது நீல ரத்தினச் சுருள் போல் இருக்கும் கூந்தல். வில்லை ஒத்த நெற்றி, சிவந்த அதரம் முதலியன, வானத்துச் சந்திரனைக் காட்டிலும் அழகுசெய்து காட்டுகின்றனவாம் இந்த முக சந்திரர்களை.

அரம் தீட்டிக் கூராக்கிய வேலாயுதம் போலப் பாய்ந்துவரும் அந்தக் கண்களோ, அழகுக்கு அழகு செய்து அபார வசீகரம் தருகின்றன முகமாகிய சந்திர பிம்பத்திற்கு. இத்தகைய சந்திரோதயங்கள் எத்தனை எத்தனை, மிதிலைமாநகரமெங்கும்!

சாளரந் தோறும் தோன்றும்
சந்திர உதயம் கண்டார்!

— என்ன வசீகரமான நிலா - விருந்து! இந்தச் செய்யுளடிதான் என்ன வசீகரமான செவி - விருந்து! ஊஞ்சல் - பாட்டையும், அதன் இசை - அழகையும் பாடிப் பாடி அனுபவிப்பதுபோல் அனுபவிக்கலாம் இந்தப் பாட்டையும் இதன் இசை - நலத்தையும்.

இத்தகைய பெண்கள் அந்தக் கூர்மையான வேல் போன்ற கண்கள் தொடாப் பந்தாடும் காட்சிதான் எவ்வளவு வசீகரமானது! அந்த இரண்டு அடிகளை வர்ணிக்கும் பாட்டிலும், இசை - இன்பத்திலும்தான் வசீகர சக்திக்குக் குறைவுண்டா?



பி.-ஸ்ரீ.

44. அழகு, காதல், வீரம்

மிதிலா பட்டணத்தில் எத்தனையோ சோலைகள், பூந்தோட்டங்கள்; அவற்றுக்கு இடையே பல பல தடாகங்கள் எவ்வளவோ அழகாக அமைக்கப்பட்டிருக்கின்றன. தடாகங்களில் பல, உல்லாஸமாக நீந்தி விளையாடி நீராடுவதற்கு வசதியான நீர்நிலைகள். இவற்றுள் சில, தாமரைத் தடாகங்கள்.

இத் தடாகங்களில், செந்தாமரைப் பூக்களும் வெண்தாமரைப் பூக்களும் நாட்டின் அழகுச் செல்வத்திற்கும் அறிவுச் செல்வத்திற்கும் அறிகுறியாகச் செழித்து மலர்ந்து, "என்ன? நீர்நிலையா, தாமரைக் காடா?" என்று வியக்கும்படி காட்சியளிக்கின்றன. தாமரை மலர்களோடு செவ்வாம்பல் மலர்களும் பலவகை நீல மலர்களும் காணப்படுகின்றன. கொடிகளுக்கும் மலர்களுக்கும் இடையே நீரலைகளும், அலைகளுக்கு இடையே கெண்டை வரால் முதலான மீன்களும் அழகுக்கு அழகு செய்கின்றன.

நீராடும் அழகு

ஆம். ஆனல் அவை ஏன் அப்படிச் சலிக்கின்றன? சஞ்சலப்படுகின்றனவா! இப்போது அந்த மீன்கள் மட்டுமல்ல, அந்த அலைகள் மட்டுமல்ல, தாமரை மலரும் ஆம்பல் மலரும் நீலோற்பல மலரும், அந்தக் கொடிகளும் கூட ஏன் அப்படி வருந்துவது போலத் தோன்றுகின்றன? ஓஹோ! பெண்கள் நீராடும் தடாகங்கள் இவை; அவர்கள் நீராடும் அழகு இது!

அப்படியானல் மலர்களும் கொடிகளும், மீன்களும் அலைகளும் பிறவும் இப்படித் தேம்பி வருந்த வேண்டுமா? பொறாமைதான்! முகத்தைத் தண்ணீருக்கு மேலே அதோ அப்படி வைத்துக்கொண்டு நீந்தி வருகிறாளே ஜலமோகினி போலே, அந்த முகத்தைக் கண்டால் தாமரை ஏன் தேம்பித் தேம்பி அழாது? "அந்த முகத்துக்கு நாம் ஒப்பாக வில்லையே!" என்றுதான் இந்தத் தாமரை முகத்திலே முத்துப் போலக் கண்ணீர் துளிக்கிறது, ததும்புகிறது!

"எங்கள் பூக்குலத்தின் ராணிக்கே இந்தக் கதி என்றால், நான் எம்மா திரம்? அந்த வாய்க்கு ஈடா, சோடா?" என்று ஆம்பல் மலர் தேம்பித் தேம்பி அழுவதில் என்ன அதிசயம்!


போகட்டும்: அந்தச் செவ்வாம்பலை விட்டு விட்டு இந்த நீல மலர்களையும் கருநெய்தல் மலர்களையும் தான் கேட்டுப் பாருங்கள்: கண்ணை மலர விழித்து தடாகத்தின் அழகுகளைப் பார்த்துக் கொண்டிருந்தனவே! நீந்தி வருகிறவளின் அழகு மான கண்ணழகைப் பார்த்ததும், வந்து விட்டது வெட்கம், பொங்கி விடுகிறது சோகம். இந்தச் சோகத்தைப் பங்கிட்டுக் கொள்கின்றன கெண்டை மீன்களும், அந்தக் கண்களின் பிறழ்ச்சியைப் பார்த்துப் பார்த்துத் தேம்பித் தேம்பி!

மலர்களைப் போல் பூங்கொடிகளும் தேம்பித் தேம்பி ஏங்குகின்றன, "அந்தப் பெண் கொடிகளுக்கு நாம் தான் எப்படி ஒப்பாவோம்!" என்று. அலைகளும், அலை அலையாக விரியும் கூந்தலுக்கு ஒப்பாக மாட்டோமே! — என்று வருந்தி அலைகின்றன.

நீந்தி வந்தவள் கரையேறியதும் அந்த கணைக்காலுக்குத் தோற்றுத் தேம்பி ஓடி ஒளிந்துக் கொள்கின்றன, தண்ணீருக்குள்ளே வரால் மீன்கள்.

இப்படியெல்லாம் அல்லோல கல்லோலப் படுகிறது தடாகம் — மங்கையர் விரும்பி நீராடும் தடாகம். இத்தகைய தடாகங்கள் பலவும் கண்டார்களாம் விசுவாமித்திர ராம லட்சுமணர்கள்:

பங்கயம் குவளை ஆம்பல்
  படர்கொடி வள்ளை நீலம்
செங்கிடை தரங்கம் கெண்டை
  சினைவரால் இனைய தேம்பத்,
தங்கள்வே(று) உவமை இல்லா
  அவயவம் தழுவிச் சாலும்
மங்கையர் விருப்பி ஆடும்
  வாவிகள் பலவும் கண்டார்.





[பங்கயம்—தாமரை. குவளை—கரு நெய்தல் மலர். ஆம்பல்—செவ்வாம்பல் மலர். வள்ளை—ஒருவகைக் கொடி: அதன் இலை காதுபோல் இருக்கும் என்பர். நீலம் — நீலோற்பல மலர். செங்கிடை — சிவந்த கிடைச்சு. நாகம்—அலை. சினை வரால்—சூல்கொண்ட வரால் மீன்கள். இனைய—இவ்வ போல்வன. தழுவி—பொருந்தி. சாலும்—சிறந்த. வாவி—தடாகம்.]

சண்டையின் அழகு!

மிதிலையை, ஒரு காதற் சோலையாகச் சிங்காரித்து வரும் கவிஞன், காதலர் - கண்களினாலேயே நீர்நிலைகளையும் காண்கிறான், களிக்கிறான்; காட்டுகிறான், களிப்பூட்டுகிறான். நகரத்திலே அங்கும் இங்கும் காதலர்களின் செல்லச் சண்டைகளையும் குறிப்பாகக் காட்டுகிறான்; மேலும் களிப்பூட்டுகிறான்.

காதலர்-கலகம் என்ற செல்லச் சண்டையை "ஊடல்" என்கிறார்கள். இந்த ஊடலைச் சில காதலிமார் மறைத்து வைக்கவும் முயல்கிறார்களாம். ஆனால் அது முடியாத காரியம் என்று தோன்றியது. உடனே "சண்டை போட்டுத்தான் ஆக வேணும்" என்ற கங்கணங் கட்டிக் கொள்கிறார்கள், நாக்கைத் நீட்டிக் கொள்கிறார்கள். எனினும் இவ்வளவு ஆர்ப்பாட்டமாக ஆரம்பித்த சண்டையைப் போட்டுத் தீர்க்கவும் முடியவில்லை. சிரிப்பு வந்து காரியத்தைக் கெடுத்து விடுகிறது! ஏன், இந்த அசந்தர்ப்பமான சிரிப்பு?

பளிக்குவள் ளத்து வார்க்கும்
பசுநறுந் தேறல் மாந்தி,
வெளிப்படு நகைய வாகி,
வெறியின மிழற்று கின்ற,
ஒளிப்பினும் ஒளிக்க ஒட்டா
ஊடலை உணர்த்து மாபோல்,
களிப்பினை உணர்த்தும் செவ்விக்
கமலங்கள் பலவும் கண்டார்.

[பளிக்கு வள்ளம் — பளிங்குக் கிண்ணம். பசுநறுந் தேறல் — புதிய வாசனை வீசுகிற, தெளிவான மது. மாந்தி — குடித்து. நகைய ஆகி — சிரிப்பை உடையனவாய். மிழற்றுகின்ற — குழறிப் பேசுகிற. ஒட்டா — ஒட்டாத; முடியாத. உணர்த்துமாபோல் — உணர்த்துமாறு போல்; உணரச் செய்யும் வகையாக. செவ்வி — புதிய அழகு. கமலங்கள் — செந்தாமரைப் பூக்கள்.]

ஸ்படிகக் கிண்ணங்களிலே புதிய மதுவை வார்த்துக் குடித்ததும், உள்ளத்திலே ஒளிக்க முயன்ற ரகஸ்யங்களெல்லாம் ஓடி வருகின்றன வெளியே! காரணமின்றிப் பிறக்கும் சிரிப்பினாலும், வெறியிலே குழறி வரும் பேச்சுக்களினாலும் வெளியே வந்து குதித்து விடுகின்றன! "மது உள்ளே, மதி வெளியே!" என்பது பிரசித்தமல்லவா? 'செல்லச் சண்டை'யில் 'செல்ல'த்தை ஒளித்துச் 'சண்டை'யைப் போட்டுப் பார்க்க முயன்றார்கள். ஆனால் உள்ளே சென்ற மதுவோ அந்தச் 'செல்ல'த்தைச் சிரிப்பாக வெளிப்படுத்தி விடுகிறதாம். அப்போது முகத்திலே கோபம் மறையக் களிப்பு வருகிறது. களிப்பினால் அந்த முகம் ஒரு புதிய அழகிய செந்தாமரைப் பூவைப் போல் மலர்ச்சி பெறுகிறதாம். மதுவெறி ஒரு சமாதான தூதனாகி விடுகிறது காதல் வெறியர்களுக் கிடையே!

சூதுபோரின் அழகு!

பட்டணத்தின் ஒரு பகுதியிலே சூது விளையாடும் பெண்களையும் பார்த்துக்கொண்டு போகிறார்கள் மூவரும். அப்பெண்கள் (சூதாடிகளல்லவா?) கைவளைகளையும் காதணிகளையும் ரத்தின மாலைகளையும் மற்றும் பல ஆபரணங்களையும் பந்தயப் பொருளாக வைத்து ஆடுகிறார்களாம். சோர்ந்த கூந்தலையும் எடுத்துக் கட்டிக்கொள்ள நேரமில்லை: அவ்வளவு வெறியுடன் ஆடிக்கொண்டிருக்கிறார்களாம். மதுபானம்போல், போர் வெறிபோல, சூதிலும் வெறி இருக்கிறதல்லவா? இத்தகைய வெறிகளையும் குறிப்பிடத்தான் செய்கிறான் ராமராஜ்ய ஆஸ்தான கவியாகிய கம்பன் — ராட்சஸ பூமியில் மட்டுமல்ல, ஸ்ரீராமராஜ்யங்களிலும்தான்!

காதலைக் காக்கும் வீரம்

சில சில இடங்களில் யௌவன புருஷர்கள் கூட்டங் கூட்டமாகக் காணப்படுகிறார்கள். "என்ன அழகு! என்ன குணம்! என்ன வீரம்!" என்று பார்த்ததும் வியக்கும்படியிருக்கிறதாம் அவர்கள் தோற்றம்:

வெஞ்சுடர் உருவிற்(று) அன்ன
மேனியர், வேண்டிற்(று) ஈயும்
நெஞ்சினர், ஈசன் கண்ணின்
நெருப்பரு அலங்கன் அன்னார்,
செஞ்சிலைக் கரத்தர், மாதர்
புலவிகள் திருத்திச் சேந்த
குஞ்சியர், சூழ நின்ற
மைந்தர்தம் குழாங்கள் கண்டார்.

[வெஞ்சுடர் — விரும்பத் தக்க சுடர். உருவிற்று அன்ன — உருவம் எடுத்தால் ஒத்த. வேண்டிற்ற — வேண்டும் பொருள். ஈசன் — சிவ பெருமான். நெருப்பஅரு—நெருப்பால் எரிந்து போகாத. அலங்கன்—மன்மதன். அன்னார் — ஒத்தவர்கள். செஞ்சிலைக் கரத்தர் — வில்லை ஏந்திய சிவந்த கையை உடையவர்கள். புலவி — ஊடல். சேந்த — சிவந்த. குஞ்சி — முடி.]

"உருவம் தரித்த சுடர்களா, ஜோதிகளா? சிவ பெருமானுடைய நெற்றிக் கண்ணிலே வெந்து போகாத மன்மத சொரூபங்களா?" என்று பிரமிக்கும்படியிருக்கிறதாம் அந்த யௌவன புருஷர்களின் தோற்றம். அழகைப்போல் குணம், குணத்தைப் போல் வீரம். உண்மையில் கொடையும் வீரம் தானே? வில்லும் கையுமாக வரும் அவர்கள் காதலர்கள் என்றும் குறிப்பிடுகிறான் கவிஞன்.

வீரத்தை வளர்க்கும் காதலை நீர்நிலைகளில் கண்டோம்; சாளரந்தோறும் கண்டோம்; பந்தாடக் கண்டோம்; ஊஞ்சலாடக் கண்டோம்; கீதம் பாடக் கண்டோம்; நடனம் ஆடக் கண்டோம். இங்கே அந்தக் காதலைக் காக்கும் வீரத்தைக் காண்கிறோம். ஆம், "கண்ணினைக் காக்கின்ற இமை" போல் காதலைக் காக்கின்ற வீரத்தைப் பார்க்கிறோம்.

* * * *

இத்தகைய பல வேறு காட்சிகளையும் பார்த்துக்கொண்டே விசுவாமித்திர ராம லட்சுமணர்கள், ஜனக மஹாராஜாவின் அரண்மனையைச் சூழ்ந்திருக்கும் மதிற் புறத்திலுள்ள ஒரு சோலையை அடைகிறார்கள்.



பி. ஸ்ரீ.

45. கன்னிமாடத்தில் கவியின்பம்

இன்ப மயமாகத் தொடங்கும் மிதிலைக் காட்சிகள் இன்பத்தின்மேல் இன்பமாக விரிகின்றன, மலர்கின்றன ; மிதிலைமா நகரத்தையே ஒரு சிங்காரப் பூஞ்சோலையாகக் காட்டுகின்றன. 'சோலைக்குள் சோலை' என்று சொல்லும்படி ஒரு சோலை தென்பட்டது விச்வாமித்திர ராம லக்ஷ்மணர்களுக்கு. அது அரண்மனையின் மதில்-புறத்திலுள்ள பூஞ்சோலை ; அரண்மனைப் பெண்கள் பூக் கொய்து விளையாடும் சோலை.

மூவரும் அந்தச் சோலையைப் பார்த்துக் கொண்டே போகிறார்கள். அந்தப் பூஞ்சோலையில் பைங்கிளிகள்தான் எவ்வளவு அழகாய்க் கொலு விருக்கின்றன பூமரக் கிளைகளிலே, பூங்கொடிகளிலே, பூஞ்செடிகளிலே !

கிளியோடு கொஞ்சும் மயில்

அந்தக் கிளிகள் பேசுவதுதான் எவ்வளவு அழகாய் இருக்கிறது! "சர்க்கரைப் பாகுபோல் இனிமையாக இருக்கிறதே" என்று தோன்றுகிறது இளைஞர்களுக்கு. "கிளிகளோடு கொஞ்சும் கிளிகள்" என்று சொல்லும்படி பைங்கிளிகளுடன் பேசிக் கொண்டு பூக் கொய்கிறார்களே சில பெண்கள், அவர்களுடைய குரலினிமையைத் தான் என்னென்பது ?

இனி இந்தக் காட்சியைக் கவிஞன் காட்டும் கண்ணாடி வழியாக மென்னப் பார்ப்போம் :—

பாகொக் கும்சொல்—பைங்கிளி
யோடும் பலபேசி,
மாகத்(து) உம்பர் மங்கையர்
நாண மலர்கொய்யும்
தோகைக் கொம்பின் அன்னவர்க்(கு),
அன்னம் நடைதோற்றுப்
போகக் கண்டு, வண்டினம்
ஆர்க்கும் பொழில் கண்டார்.

[மாகம்-பெரிய ,ஆகாசம். உம்பர் மங்கையர்-மேலே உள்ள தெய்வப் பெண்கள். தோகை-மயில். கொம்பு-பூங்கொம்பு. ஆர்க்கும்-ஆரவாரம் செய்யும்.]

சோலையை நெருங்கும் போதே, வண்டினங்களின் ரீங்கார கீதத்தைக் கேட்டார்கள்; பச்சைக் கிளிகளின் பாகுபோன்ற பேச்சைக் கேட்டார்கள்; அந்தக் கிளிகளோடு கொஞ்சும் பெண்களின் பேச்சாகிய கீதத்தையும் கேட்டார்கள். சோலைக்குள்ளே வந்ததும் அந்தப் பெண்களின் சாயலையும் மெல்லிய உருவத்தையும் பார்க்கிறார்கள். அந்தப் பெண்களின் அழகைக் கவிஞன் எவ்வளவு உத்ஸாகமாய் நமக்குக் காட்டுகிறான்!

வானத்திலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்களாம் தெய்வப் பெண்கள், இந்தச் சோலைப் பெண்களை. "ஆஹா! அந்தச் சோலைக் கிளிகள் எங்கே? நாம் எங்கே?" என்று நாணம் அடைந்து போகிறார்களாம். ஆம், இந்த அழகுக்கு அந்தத் தெய்வ அழகும் தோற்றுப் போகிறதாம்.



பெண்கள் அங்கும் இங்கும் போய்ப் பூக் கொய்கிறார்கள் பரபரப்பாக,—அவிழ்ந்த கூந்தலையும் முடித்துக்கொள்ளாமலே. அப்போது ஒரு கணம் பூஞ்செடிகள், கொடிகளுக்கிடையே தோகை விரித்தாடும் மயில் போல் தோன்றுகிறார்கள் பூமரங்களுக் கிடையே காற்றில் அசையும் பூங் கொம்புகளின் கீழே, நடை பயிலும் பூங் கொம்புகளாய்த் தோற்றமளிக்கிறார்கள்.

அச்சமயம் சில அன்னங்கள் அவர்களைக்கண்டு ஒதுங்கிப் போகின்றன. "சரி, சரி; அன்னங்கள் நடை அழகுக்குத் தோற்றுப் போகின்றன, — தெய்வ மங்கையர் வடிவழகுக்குத் தோற்றுப் போனது போலே" என்று தான் சொல்லத் தோன்றுகிறது.

ஆனால் இப்படிப் பட்ட வெற்றி தோல்விகளை நிச்சயிப்பவர் யார்? யாராவது மத்தியஸ்தர் உண்டா? ஆம், ரீங்கா

ரம் செய்யும் வண்டுகள்தான் மத்தியஸ்தர்கள்! அவை மேலெழுந்து ரீங்காரம் செய்வது, இப்போது தோற்றுப்போன அன்னங்களுக்கும் தெய்வப் பெண்களுக்கும் அவமதிப்பும், வெற்றி யடைந்த சோலைப் பெண்களுக்குக் குதூகலமும் உண்டாகும்படி, கோஷம் செய்வது போலிருக்கிறதாம்.

சோலையும், கன்னிமாடமும்

என்ன அழகான கற்பனை! காவிய நாயகனும் காவிய நாயகியும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் காதலிப்பதற்கு முன் ஒரு காதற்சோலை அமைத்து விட்டான் கவிஞன். ஒன்றன்பின் ஒன்றாக வரும் மிதிலைக் காட்சிகளெல்லாம் சேர்ந்தே ஒரு காதற் சோலைதான், அடுத்து வரப்போகும் சீதாராமர்களின் சந்திப்பிற்கு!

ராஜகுலப் பெண்கள் பூக்கொய்து கொண்டிருந்த இந்தச் சோலையை அடுத்து, மிகவும் அழகிய பொன் மயமான மாளிகை-வரிசைகளோடு கூடிய மகாராஜாவின் அரண்மனை கட்புலனாயிற்று. அந்த அரண்மனை தன்னைச் சுற்றிலுமுள்ள அகழியோடும் அகழியோடும் கம்பீரமாய்க் காட்சி யளித்தது. அரண்மனையின் பகுதியாகக் கன்னி மாடமும் தெரிந்தது.

அந்தக் கன்னிமாடந்தான் எவ்வளவு அற்புதமாய் அமைந்திருக்கிறது! பொன் மயமாக ஜொலிக்கிறது; பூவைப் போல் மலர்ச்சி பெற்றிருக்கிறது. தேன்தாரையோ!—என்று சொல்லும்படியும் கண்ணை மயக்குகிறது சிற்பச் செல்வம்! "இல்லை, இல்லை; கல்லிலும் பொன்னிலும் மணியிலும் அமைந்த செஞ்சொற் கவிதைதான் அது!" என்றே பிரமித்துப் போகிறார்கள் மூவரும்.

கவியின்பம் நின்றார்!

"கன்னிமாடத்தின் மேடையிலே, அது என்ன, அதிசயத்தின் மேல் அதிசயம்! பொன்னின் ஜோதியோ அப்படிக் காண்கிறது பொன் மயமான கன்னி மாடத்தின்மீது? பூவின் நறுமணந்தான் அப்படிப் பொலிவுடன் திகழ்கிறதா? தேனின் தீஞ்சுவையோ அப்படித் திகழ்கிறது? அல்லது கவியின்பமே அந்த உருவில் வந்து விட்டதா?

> பொன்னின் சோதி போதினில்
> நாற்றம் பொலிவேபோல்
> தென்னுண் தேனின் தீஞ்சுவை
> செஞ்சொல்—கவியின்பம்,
> கன்னிம் மாடத்(து) உம்பரின்
> மாடே, களிபேடோ(டு)
> அன்னம் ஆடும் முன்துறை
> கண்டங்(கு) அயல்நின்றார்.

151

[போது—பூ. நாற்றம்—நறுமணம். பொலிவு—சிறப்பு. தென்உண்—அழகு பொருந்திய. கன்னிம்மாடம் — கன்னிமாடம். உம்பரின் மாடே—மேலிடத்தில்; மேடையில். களிபேடு — களிக்கின்ற பெண் அன்னம். ஆடும்—விளையாடும். அயல் — அருகே.]



உபமானமாகக் கூறிய பொருள்களெல்லாம் இனிய பொருள்களிலும் இனிய பொருள்கள். அவைகளை அடுக்கி அடுக்கிக் கவியின்பத்தை மகுடமாக வைத்து அந்த அழகு - ராணியை முதல் முதல் காட்டுகிறான் கவிஞன்.

'செஞ்சொல் - கவி இன்பம்' என்கிறான். 'செம்மையாக வந்த அமையும் சொற்களிலே பிறக்கும் கவி இன்பம்' என்பது பொருள். கவிதை என்பது சொற்களில் இல்லாத இன்பத்தைச் சொற்களைக் கொண்டே பிறப்பித்துக் காட்டும் மந்திர வித்தை யல்லவா? கவிஞன் என்ற மந்திரவாதி மனோபாவம் என்ற தன் மாத்திரைக் கோலை உயர்த்துகிறான்: வந்து விழுகின்றன செஞ்சொற்களும் சொல்-தொடர்களும், 'நான் முன்னே! நீ முன்னே!' என்று. 'அடடா, என்ன சொற்சேர்க்கை!' என்று வியக்கிறோம்? சொற்கள் மறைந்து போய்க் கவி இன்பமே உருவெடுத்து வருகிறதல்லவா? இதுதான் செஞ்சொற் கவியின்பம்.

இத்தகைய 'செஞ்சொற் கவி இன்பம்'தான் காவிய நாயகியாகிய சீதை என்கிறான் கவிஞன்.) காதல்-இன்பம் இன்னதென்று இப்போதுதான் முதல் முதல் உணரப் போகிறாள் சீதை. இத் தருணத்திலே அவளைக் கவியின்பமாகக் காட்டுவது எவ்வளவு பொருத்தமானது. கவியின்பமும் ஒருவகையில் காதல் இன்பந்தானே!

அருகே உள்ள அகழித் துறையில் பெண் அன்னத்தோடு ஆண் அன்னம் ஒன்று விளையாடிக் கொண்டிருக்கிறது. அந்த விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் சீதை கன்னி மாடத்தின் மேலிருந்து.

இதே சமயத்தில் சீதை கண்களும் ராமன் கண்களும் தற்செயலாகச் சந்திக்கப் போகின்றன. இதற்கு முன்பும் அன்னங்களின் விளையாட்டைப் பார்த்தவள்தான். ஆனால் இப்போது ஆண் அன்னமும் பெண் அன்னமும் விளையாடுவதை நோக்கி, ராமன் கண்களை நோக்கியதும், சீதையின் கன்னி உள்ளத்திலே காதல் விளைகிறது — என்று சொல்லப் போகிறான் கவிஞன்.

இந்தக் காட்சி ராமன் - உள்ளத்திலும் காதலை விளைவிக்கிறது; இது என்றும் மங்காத மனப்படமாக ஆழ்ந்து பதிந்து விடப் போகிறது.

இந்தக் காட்சியை ஞாபகப்படுத்திக் கொண்டுதான் சீதையை இழந்த நிலையில் ராமன் அநுமனை நோக்கி ஒரு முக்கியமான அடையாள வார்த்தை சொல்லப் போகிறான் (கிஷ்கிந்தா காண்டத்திலே):

அன்னம்ஆ டும்துறைக்(கு)
அருகுநின் றாளை, அக்
கன்னிமா டத்திடைக்
கண்டதும் கழறுவாய்!

[கழறுவாய் — மனசில் படும்படி சொல்லுவாய்.]

"கவியின்பம்...நின்றாள்" என்று சீதை நின்ற நிலையைக் குறிப்பிடுவது இந்த வசீகரமான காட்சிக்கும் ஓர் அபூர்வ வசீகரம் தருகிறது.



பி. ஸ்ரீ.

46. அழகும் அழகு பெற்றது!

‘பொன்னின் ஜோதி’ யென்கிறான் சீதையின் ஸ்வர்ண சோபிதமான தேஜஸை. அந்த அழகின் ஸூக்ஷ்மமான மென்மையை, இனிமையைப் ‘பூவின் நறுமணம்’ என்கிறான்; பூவின் ஸாரமாகிய தேனின் ஸாரமாகிய ‘தீஞ்சுவை’ யென்கிறான். கடைசியாகக் ‘கவி யின்பம்’ என்றே முடி சூட்டிப் பார்க்கிறான் கவிஞன், ‘சீதை’ என்ற நவ யௌவன சௌந்தர்ய சிகரத்தை.

எந்தப் பெண்ணை யார் வர்ணிப்பதாயினும் “இவள் அழகுத் தெய்வமாகிய ஸாக்ஷாத் மஹாலக்ஷ்மி போலிருக்கிறாள்!” என்பதுதானே உபமான சிகரம்? “அந்த மஹாலக்ஷ்மி தானே இந்தச் சீதாலக்ஷ்மியாக வந்திருக்கிறாள்! அப்படியிருக்கும்போது, இந்த லக்ஷ்மிக்கு இந்த லக்ஷ்மியேதான் உபமானம்!—என்று சொல்வதை விட்டு, வேறொரு உவமையை எங்கே தேடி எப்படிக் கண்டு பிடிப்பது?” என்கிறான்.

அழகு ஒருபுற மிருக்கட்டும்: தேபிராட்டியின் பொறுமை முதலான குணங்களை போதும் உமா தேவி முதலிய தெய்வப் பெண்களும் உச்சி மேல் கை கூப்புவதற்கு! அத்தகைய குண சௌந்தர்யமே ரூப சௌந்தர்யமாகப் பரிணமித்து விட்டதாம்!— ‘அகமே புறம்!’ என்று அதிசயிக்கும்படி.

அழகுக்கடலா? அக்கடலமுதா?

இத்தகைய மேனி - அழகைக் கண்டவர் இந்தக் காட்சிக் கடலில் கரை காணவே யில்லையாம். “ஐயோ! இமைக்கும் கண்களைப் பெற்று விட்டோமே!” என்று வருந்தினார்களாம். இமையாக் கண்ணாரகிய தேவர்களோ, “இரண்டு கண் போதுமா? இரண்டு லக்ஷம் கண்கள்தான் போதுமா?......” என்றெல்லாம் ஆச்சரியப் பட்டார்களாம்;

உமையாள் ஒக்கும் மங்கையர்
உச்சிக் கரம்வைக்கும்
கமையாள் மேனி கண்டவர்
காட்சிக் கரைகாணர்,
"இமையார் நாட்டம் பெற்றிலம்"
என்றார்; "இருகண்ணால்
அமையா(து)" என்றார் அந்தர 160
வானத் தவரெல்லாம்.

[கமையாள் — பொறுமை உடையவள். நாட்டம் — பார்வை.]

சீதையின் மேனி அழகைக் கண்டதும் அந்தத் தோற்றத்திலே அவளுடைய குண அழகும் அலைவீச, அதனால் பார்க்கிறவர்களுக்கெல்லாம் அவளிடம் பக்தி தோன்றுகிறது என்பதும் அவர்கள் நோக்கும்போதெல்லாம் கைகூப்பி நோக்குகிறார்கள் என்பதும் குறிப்பு.

இத்தகைய தெய்விக அழகு வாய்ந்த சீதாபிராட்டியைக் கன்னிமாடம் தந்த தேவாமிர்தம் என்றே சொல்ல வேண்டுமாம், — மஹாலக்ஷ்மியைக் கடல் தந்த அமிர்தம் என்று சொல்லுவதுபோலே. 'பாற்கடலும் பெறுவதற்கு அரிய புத்தமிர்தம்!' என்றே தோழிமார் இவளை வாய்குளிர மனங்குளிர அழைக்கிறார்களாம்.

இவள் அழகு இவளோடு நெருங்கிப் பழகும் கட்டழகிகளான தோழிமாருக்கும் ஒரு புதுமைதான்! என்றும் புதுமைதான்! இத் தெய்வ அழகை இவர்களும் பக்தி - உணர்ச்சியோடுதான் பார்க்கிறார்கள்.

தன்நேர் இல்லா மங்கையர்,
"செங்கைத் தளிர்மானே!
அன்னே! தேனே! ஆரமிர்
தே!" என்(று), அடிபோற்றி 161
முன்னே முன்னே மொய்ம்மலர்
தூவி முறைசாரப்,
பொன்னே சூழும் பூவின்ஒ
துங்கிப் பொலிகின்றாள்.

[தன் நேர் இல்லா — தனக்கு நிகர் இல்லாத. செங்கை — சிவந்த கைகளை உடைய. தளிர்மானே — தளிர்போன்ற இளமானே. அன்னே — அன்னமே. மொய்ம்மலர் — நெருங்கிய மலர். முறைசார — முறையாக வரிசையில் நிற்க. பொன் — லக்ஷ்மி.]

எவ்வளவு அன்போடு, எவ்வளவு ஆசையோடு, என்ன அருமையாக, எவ்வளவு இனிமையாக, அந்தத் தோழிமார் சீதையை அழைக்கிறார்கள்! கொஞ்சுகிறார்கள் என்றே தோன்றுகிறது. மலரின் மென்மையையும் வெல்லக் கூடிய அந்த அடி மலர்களைத் தான் எப்படிப் போற்றுகிறார்கள்! முறையாக அணிவகுத்து நிற்பவர்களைப் போல் நின்று அந்த அழகிகள் சீதை நடந்து செல்ல வேண்டிய இடங்களிலெல்லாம் புஷ்பங்களைத் தூவுகிறார்களாம், சொரிகிறார்களாம், பரப்புகிறார்களாம். அந்த மலர் - மெத்தை மீது மலர் - அடி வைத்துச் சீதை நடக்கும்போது, அந்த மலர்கள் பொன்னரசியாகிய மகாலக்ஷ்மியைச் சூழும் பூக்களைப் போலக் காண்கின்றனவாம். சீதையும் பூவில் ஒதுங்கும் பொன் போலப் பொலிகின்றாளாம்.

இந்தப் பாட்டிலே சீதையைத் தோழிமார் எடுத்த எடுப்பிலே 'செங்கை,
தளிர்மானே!' என்று சொல்வதைக் கவனிக்கத்தக்கது. அந்தச் சிவந்த மலர்க்
கைகளுக்கும், தளிர்போன்ற 'வெல்வெட்' தன்மை வாய்ந்த அந்த மேனிக்
கும் வண்ணத்திற்கும், மானின் மருண்ட பார்வைக்கும் உள்ளம் பறிகொடுத்த
வர்கள் பேச்சு! — என்று தோன்றுகிறதா, இல்லையா?

மின்னல்-ராணி

இத்தகைய தோழிமார் சூழ நின்று சேவிக்கும் அத்தகைய சீதையை அந்த
அழகு-வெள்ளத்தோடும் ஒளி-வெள்ளத்தோடும் காட்டுகிறான் கவிஞன்; கண்
கூசும்படி காட்டுகிறான். இரண்டு கண்
ணல்ல; நமக்கு இரண்டு லட்சம் கண்
கள் இருந்தாலும் கூசும்படி:

.................., தகோடி
மின்சேவிக்க மின்னர(சு)
என்னும் படி நின்றாள்.

ஒவ்வொரு தோழியும் ஒரு மின்னற்
கொடி! அவர்கள் அணிந்த ஆபரணங்
களும், அங்க சௌந்தர்யங்களும் எல்
லாம் மின்னல்கள்! அவர்கள் அப்படி



ந்தாலும், இப்படித் திரும்பினாலும், அதோ பார்த்தாலும், இதோ புன்னகை த்தாலும் 'பளிச்! பளிச்!' என்று எத்தனையோ மின்வெட்டுகள்! சீதையோ று கோடி மின்னல்கள் ஏக காலத்திலே சூழ்ந்து நின்று சேவிக்கிற — ணிசெய்கிற — மின்னல்-ராணி தான்!

"என்ன மிஞ்னற் கவிதை!" என்று அதிசயிக்கிறீர்களல்லவா? கண் ம் கருத்தும்கூசும் அந்தத் தெய்வ அழகை வேறு எப்படித்தான் வர்ணிப்பது?

பெண்கனி

சீதையின் அழகைக் குறித்து எவ்வளவோ பயபக்தியை உண்டு பண்ணி ட்ட கவிஞன், இனி இவளையும் ஒரு காதற் பெண்ணாகக் காட்டப் போகி ன். இதற்காக அந்தப் போழ்து குடிகொண்ட விழியை வர்ணிக்கிறான். ணக் கூசும் அந்த அழகையும் கண்டுதான், அதோ கல்லும் புல்லும் உருகிக் காண்டிருக்கின்றன! — என்று காட்டுகிறான்:

'கொல்லும் வேலும் கூற்றமும்
என்னும் இவையெல்லாம்
வெல்லும்! வெல்லும்!' என்னமத
ர்க்கும் விழிகொண்டாள்!
சொல்லும் தன்மைத் தன்(று)அது; 163
குன்றும் சுவரும்,திண்
கல்லும் புல்லும் கண்டுரு
கப்பெண் கனிநின்றாள்.

[கூற்றம் — யமன். இவை எல்லாம் — இவை எல்லாவற்றையும். தர்க்கும் — மதம் கொண்டு களிக்கும். தன்மைத்து — தன்மையை உடை து. திண் — வன்மையான; கடினமான.]

அந்த விழிகளில் கொல்லும் வேலையும் யமனையும் வெல்லக் கூடிய சக்தியும் இருக்கிறது; கல்லையும் புல்லையும் உருகச் செய்யும் சக்தியும் இருக்கிறதாம். டரிய குன்றும் சிறிய சுவரும், வன்மையான கல்லும் மென்மையான புல்லும் ல்லாம் எப்படியோ அந்தத் தெய்வ அழகைக் கண்டு உருகிக் கொண்டிருக்கின் னவாம். அசேதனமான கல்லும் புல்லுங்கூடக் கண்டு உருகுவதென்றால், கண் டைத்த பயனைச் சீதையைக் கண்டு கொண்டிருக்கும் தோழிப் பெண்கள் தலானோர் எவ்வளவு இன்பமடைந்து எப்படி உருகிக்கொண் டிருப்பார்கள்! ாவிய நாயகன் தான் எப்படியெல்லாம் உருகப் போகிறானோ? — என்பதும் குறிப்பு.

சீதையைப் 'பெண் கனி' என்று குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. பெண்மை என்ற கல்பக விருக்ஷத்திலே எத்தனையோ மஹா யுகங்களுக்கு இடையே அபூர்வமாய்க் கனிந்து வரும் கனி அல்லவா? இப் பெண் கனியைப் பெண்மை என்ற அழகுக் கடலிலே தோன்றிய அமிர்தம் என்றும் குறிப்பாகக் காட்டுகிறானல்லவா?

* * * *

கண்களுக்கெல்லாம் திருவிழா என்று சொல்லும்படி உத்ஸாஹத்தை உண்டு பண்ணுகிற எத்தனையோ அழகுகளைப் பார்க்கிறோம், மண்ணிலும் விண் ணிலும். "மலர் அழகு; மின்னல் அழகு; நட்சத்திரம் அழகு; சந்திரன் அழகு; வானவில் அழகு" என்றெல்லாம் சொல்லுகிறோம். ஆனால் "ஒரு பெண்ணின் ஜீவகளையும் தர்ம ஒளியும் நிறைந்த முகத்திற்கு ஒப்பான அழகு மண்ணிலும்

கிடையாது, விண்ணிலும் கிடையாது" என்பது ரஸிகர் மதம். அழகுத் தெய்வத்தின் ஒவ்வொரு கூறுதான் இயற்கையின் ஒவ்வொரு அழகிலும் பார்க்கிறோம். ஆனல் ஓர் அழகியைப் பார்க்கும்போது, 'அழகுத் தெய்வமே குடிகொள்ளுகிறது இந்தக் கண்களிலும் உள்ளத்திலும்" எனகிறோமே!

ஆம், எத்தனையோ யுகங்களாக எத்தனையோ கட்டழகிகளுடன் பழகித்தான் இருக்கிறது அழகுத் தெய்வம்! அவர்களுடைய இயற்கை அழகோடு ஆடை ஆபரணம் முதலான செயற்கை அழகுகளோடும் பழகித்தான் இருக்கிறது. பழகி அவர்களை யெல்லாம் அழகு ஊட்டி வளர்த்து வந்திருக்கிறது.

ஆனல், இந்த முறையிலே ஒரு பெரும் புரட்சியே ஏற்பட்டு விட்டதாம் சீதை தோன்றியதும். அதென்ன? கேளுங்கள்:

இழைகளும் குழைகளும்
எல்லா. முன்னமே
மழைபொரு கண் இணை
மடந்தை மாரொடும்
பழகி(து) எனினும், இப்
பாவை தோன்றலால்,
அழ(கு)எனும் அழகும்ஓர்
அழகு பெற்றதே!

[இழை — ஆபரணம். குழை — காதணி. மழைபொரு — மழையோடு போட்டி போடும். மடந்தைமார் — பெண்கள். பாவை — சித்திரப் பதுமை போல் அழகுடையவள்; இங்கே சீதை.]

எத்தனையோ பெண்கள் காதணிகளாலும் வேறு அணிகளாலும் தங்கள் அழகுகளைப் பெருக்கிக் கொண்டார்களாம்; அல்லது, அழகை எடுத்துக் காட்டும்படிச் செய்துகொண்டார்களாம். அவர்களுடைய கண்கள் மழையோடு போட்டி போட்டுக் கண்ட கண்களையும் உள்ளங்களையும் குளிரச் செய்தனவாம். அப்பேர்ப்பட்ட அழகிகளோடும் பழகிய அழகு சீதையோடு பழகியதும் தானே ஒரு புதுமை - அழகு பெற்று விட்டதாம்.

• • • *

'கல்லும் பல்லும் கண்டுருக நின்ற பெண்கனி தன் 'ஆசையின் கனி'யைச் சந்திக்கப் போகிறள்.

164

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

47. பசி, தாகம், முற்றுகை !

விசுவாமித்திர ராம லக்ஷ்மணர்கள் கன்னிமாடத்தைத் தாண்டிச் செல்ல வேண்டி யிருந்தது. விசுவாமித்திரனும் லக்ஷ்மணனும் போய்க் கொண்டுதான் இருந்தார்கள். அப்போது ராமன் கண்கள் தற்செயலாய்க் கன்னி மாடத்தில் நின்ற பெண்மணியைப் பார்த்து விட்டன. சீதையும்,—அருகே உள்ள அகழித் துறையில் பெண் அன்னமும் ஆண் அன்னமும் விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தவள்—ராமனையும் பார்த்து விட்டாள். இருவர் கண்களும் அப்படிச் சந்தித்ததும், சீதையின் கன்னி-உள்ளத்திலும் ராமனது பிரம்மசரிய உள்ளத்திலும் காதல் பிறந்து விட்டது.

திருவள்ளுவரும் கம்பரும்

இத்தகைய காதல்-நோக்கத்தைத் தமிழர்களின் ஸமரஸ ஸன்மார்க்க வேதமாகிய திருக்குறளும் குறிப்பிடுகிறது. எவ்வளவு சொற்செட்டுடனும் பொருள்-வேகத்துடனும் குறிப்பிடுகிறது :

கண்ணொடு கண்இணை
நோக்(கு)ஒக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும்
இல.

கண்ணும் கண்ணும் ஒத்துப் போனால் வாய்ச்சொல் எதற்கு? — என்னும் இக்குறளைத் தழுவியே கம்பனும் காதலர்-காட்சியைச் சித்திரிக்கிறான் :—

எண்ணரு நலத்தினாள்
இனையள் நின்றுழி,
கண்ணொடு கண்இணை
கவ்வி ஒன் றைஒன்(று)

உன்னவும் நிலைபெரு(து)
உணர்வும் ஒன்றிட,
அண்ணலும் நோக்கினான்,
அவளும் நோக்கினாள்!

[எண்ணரு — எண்ணுவதற்கும் அருமையான. நலத்தினாள் — அழகை உடையவள். இனையள் — இத்தன்மையவள். நின்றுழி — நின்ற பொழுது.]

காதல் - பசி

கண்களைக் கண்கள் கவ்வி ஒன்றை, ஒன்று உண்ணுகின்றனவாம். காதலுக்குத்தான் என்ன பசி! உடனே இருவர் உணர்வுகளும் தத்தம் இடத்திலே நிலைபெற்றிராமல் இசைந்து ஒன்றாகிவிடுகின்றன.

இந்தக் காதல் - சித்திரத்திற்குமுன், 'கண்களோடு கண்கள் நோக்கால் ஒத்தன' என்று திருவள்ளுவர் கூறுவதுகூடச் சாதாரணமான காதற் காட்சிதான்.

காதலின் பரிபாஷையிலே கண்கள் தடையின்றி உரையாடுகின்றன என்கிறார் திருவள்ளுவர். வாய்ச் சொற்களால் — மனிதன் பேசும் பாஷைகளால் — நீண்ட நேரமாகச் சொல்லமுடியாத அரிய பெரிய இரகசியங்களையெல்லாம் கணத்திலே பேசி முடித்துவிடுகின்றன. காதலர் கண்கள் — என்று திருவள்ளுவர் குறிப்பிடுவதுதான் எவ்வளவு ரஸமாயிருக்கிறது! ஆனால், — இது என்ன? அதிசயத்திற்குமேல் அதிசயமாக, 'கண்களைக் கண்கள் கவ்வி உண்ணுகின்றன' என்கிறானே கம்பன். ஆம்; இது சீதாராமர்களின் காதல், அதி தீவிரமான காதல்.

கண்கள்மேல் கண்கள் விழ, இரு உள்ளங்கள் ஒன்றுகின்றன. மனம் ஒன்றி நிற்க, மணம் நிறைவேறுகிறது அக உலகிலே. திருக்குறளும் கம்பன் வாக்கில் ஒரு புதிய வேகம் பெற்று விடுகிறது.

இவ்விதமாக மனம் பொருந்தி மணம் பெறும் காதல்-நோக்கை,

அண்ணலும் நோக்கினான்;
அவளும் நோக்கினாள்!

என்று குழந்தைகளையும் வசீகரிக்கும் அபூர்வ எளிமையுடன் வெளியிடுகிறான்.



சாதாரணமாய்த் தமிழ்க் கவிஞர்கள் இத்தகைய காட்சியைக் குறிப்பிடும் போது "அவளும் நோக்கினாள்" என்று தைரியமாகச்சொல்லி நிறுத்தி விடமாட்டார்கள். 'அவள் நோக்கியதும் நாணித் தலை குனிந்தாள்' என்பார்கள். அல்லது, 'நாணிக் கோணிய முகத்துடன் கடைக்கண்ணால் நோக்கினாள்' என்பார்கள். நவீனத் தமிழ்ப் புலவரான மனோன்மணீய ஆசிரியர் கூட,

என்நோக்(கு) எதிர்ப்படத்
தன்நோக்(கு) அகற்றி
....

ன்று காதலன் சொல்வதாக வர்ணித்திருக்கிறார். கம்பனோ ஹிந்து மஹா ணங்களின் லக்ஷ்ய ஸ்திரீ புருஷராகிய ஸீதாராமர்களையும் துணிந்து காதல க்கி, பின்னும் அதிகமான துணிவுடன்,

அண்ணலும் நோக்கினான்,
அவளும் நோக்கினாள்

ன்று பாடுகிறான்.

தமிழ்க் கவிதை உலகில் ஒரு மஹா வாக்கியம். காதலர்களின் ஹிருதய னம்! பசி ஆணுக்கு முண்டு, பெண்ணுக்கு முண்டு: காதல்-பசியும் அப் த்தானே?

இப்படிக் காதல்-பசியைச் சொல்லும்போதும் நமது பாம்பரையான ண் பாட்டைக் கவிஞன் மறந்து விடவில்லை. "அண்ணலும் நோக்கினான்" ன்று எதுகையில் (பிராசத்தில்) அழுத்திச் சொல்லி விட்டு, "அவளும் நோக் னாள்" என்பதை மோனையிலேதான் அமைத்திருக்கிறான். 'விசுவாமித்திர க்ஷ்மணர்களுக்குத் தெரிந்து விடலாகாதே' என்று ராமன் பார்த்த பார்வையி ம் பௌருஷம் நிறைந்திருந்ததாம். 'தோழிகளுக்குத் தெரிந்து விடலா தே' என்று ஸீதை பார்த்த பார்வையும் நிமிர்ந்த பார்வைதான். எனினும்,

ங்கே ஆண்மை நோக்கு! இங்கே பண்மைக்கு உரிய மென்மை நோக்கு! த்தகைய உணர்ச்சி நமது பண்பாட்டைச் சர்ந்தது. கம்பனின் மனப்பண்பும் இது.



காதல்—தாகம்

காதல்-பசியை நினைத்து 'உண் ம் நோக்கா'கக் குறிப்பிட்ட கவிஞன், ந்த உணர்ச்சி மறுகணத்திலேயே எவ் ளவு பிரமாதமாக வளர்ந்து விடுகிறது என் தைக் காட்டக் காதல்-தாகத்தையும் குறிப் டுகிறான், "பருகிய நோக்கு" என்ற சாற்றொடரிலே. இப்படியே ஆரம்பிக்கி து அடுத்த பாட்டு—அந்தக் காதல்-காட்சி ன் அடுத்த நிலை.'

ருகிய நோக்கெனும்
பாசத் தால்பிணித்(து)
ருவரை ஒருவர்தம்
உள்ளம் ஈர்த்தலால்,
ரிசில் அண்ணலும்
வாள்-கண் நங்கையும்
ருவரும் மாறிப்புக்(கு)
இதயம் எய்தினர்!

[பருகிய—(தாக ந்தியாகக்) குடி . நோக்கு எனும் சம் — பார்வை ன்ற கயிறு. பிணி து—கட்டி. ஈர்த் ல்— இழுத்தல்.

வரி சிலை—வரிந்து கட்டிய வில். வாள்-கண்—வாள் போல் வெட்டும் கண்கள்
புக்கு—புகுந்து.]

உள்ளம் கலந்து ஓர் உயிரான காதலர்கள் காதலால் புத்துயிர் பெறுகிறார்களாம். இப்புது நிலையின் தன்மைதான் எவ்வளவு அதிசயமாக இங்கே சித்திரிக்கப் படுகிறது!

கண்ணொடு கண் இணை கவ்வி உண்ட அந்த நிலைக்கும் மேலாக, இப்போது ஒருவர் அழகை ஒருவர் மொண்டு பருகுகிறார் இரு கண்களாலும்,—தாகத்தால் தவித்தவன் அள்ளி அள்ளித் தண்ணீர் குடிப்பது போலே. காதலுக்குத் தான் என்ன கொடிய தாகம்!

முற்றுகையும் வெற்றியும்

'பருகிய நோக்கு' ஒரு பாசமாக முறுகுகிறது. அந்தப் பார்வையென்னும் பாசக் கயிற்றால் கட்டி ஒருவரை ஒருவர் இழுக்க, இருவரும் மாறி இதயப் பிரவேசம் செய்கிறார்களாம்.

ராமன் சீதையின் ஹிருதயத்திலே புகுந்து விடுகிறான். ராமன் ஹிருதயத்தில் சீதையும் புகுந்துவிடுகிறாள். சீதையின் கன்னியுள்ளம் பாதுகாப்புடைய ஒரு கோட்டை என்பது குறிப்பு. அதனால்தான் ராமனை 'வரிசிலை அண்ணல்' என்கிறான் கவிஞன். வில்லும் கையுமாய்ப் புகுந்து வீரன் கன்னி-மனக் கோட்டையைக் கைவசமாக்கிக் கொள்ளுகிறானாம்.

ராமன் மனமும் ஒரு பிரம்மசர்யக் கோட்டைதான். இந்தக் கோட்டையை வசமாக்கும் தலைவிக்கும் ஆயுதம் தேவைதானே? அங்கே வில்லைக் குறிப்பிட்ட கவிஞன் இங்கே வாளைக் குறிப்பிடுகிறான்.

தொலையிலே நின்று போர்செய்யும் கருவிதான் வில். நெருங்கி நின்று போர் செய்ய வல்லது வாளல்லவா? உண்மையில் "ராமனுக்காவது ஆயுதம் வேண்டும்; சீதைக்கோ வில்லும் வேண்டாம், வாளும் வேண்டாம்!" என்றுதான் சொல்ல வருகிறான்.

தலைவன் வில் - படையோடு பிரவேசிக்கிறான் என்றால், தலைவிக்கோ கண்ணாகிய வாளே போதும்! "வாள் - கண் நங்கை" வில் வீரன் உள்ளத்தில் பிரவேசித்து அந்தக் கோட்டையிலே வெற்றிக் கொடியும் நாட்டி விடுகிறாள். ராமனுடைய வீர சௌந்தர்யம் சீதையை வசீகரித்தது என்பதும், சீதையின் மென்மையான சௌந்தர்ய நோக்கே ராமனை வசீகரித்து விட்டது என்பதும் குறிப்பு.

இந்தக் காதல் - சித்திரத்திலே கம்பன், தம்பதிகளின் ஒப்புமையைக் கூறுகிறானா? சீதையின் பெருமையைத் தான் அதிக அளவில் வற்புறுத்துகிறானா? இது எப்படி யிருந்தபோதிலும், இனி ராமன் சீதைக்காகவே வாழப் போகிறான் என்றும், சீதையும் ராமனுக்காகவே வாழப் போகிறாள் என்றும் கருதலாம். ஆம்; இவர்களுடைய காதல் - வெற்றிதானே ராமாயணம்!



பி. ஸ்ரீ.

48. பிரிந்தவர், கூடிப் பிரிந்தார்!

வாமனவதாரத்தில் உலகத்தையெல்லாம் அளந்த சிவந்த திருவடி
டன் பகவான் தன் பாற்கடல் - வீட்டுக்குத் திரும்பிப் போனார் அல்லவா ?
போது தேவி தன் சிவந்த கைகளால் அந்தக் காலைத் தொட்டுத் தடவிக்
ண்டே, "இனிமேல் இப்படித் தனியே அலைந்து திரியலாகாது,
னையும் உடன் அழைத்துப் போக வேணும்" என்று கொஞ்சினாள்.
பலியை அடக்கி மீண்ட மஹாவிஷ்ணு, "இனி ராமாவதாரம்; ராவணாதி
ஸர்களை அடக்கப் போகிறோம்" என்று தமது நிகழ்ச்சிக் குறிப்பிலே
த்து வரப்போகும் அந்த நிகழ்ச்சியைப் பிரஸ்தாபித்ததும், மஹாலக்ஷ்மி,
ப்போது நானும் கூட வருவேன்" என்று பிடிவாதம் செய்தாள். அதனால்
அவள் ஸீதா லக்ஷ்மியாகி ராமனோடு காடும் மேடும் சுற்றித் திரிந்து
த பாடுபட நேர்ந்ததாம். மகாபலி கதையிலும் 'மிதிலைக் காட்சி'யிலும்
ன் உய்த்துணர வைக்கும் அதிகக் கதை இது.

பிரிந்து கூடியது

மஹா விஷ்ணு தசரத புத்திரனாய்ப் பிறக்க வேண்டுமென்று தீர்மானித்
ம், தேவியையும் எப்படி அழைத்துப் போவது என்பது ஒரு பிரச்னையாகி
டது. விரைவில் மஹா லக்ஷ்மி ஜனககுல சுந்தரியாக மிதிலையில் பிறக்க
ண்டும் என்ற தீர்மானத்திலே பிரச்னையும் தீர்ந்தது. எனினும் ஆரம்பத்தில்
வு பிரிவுதானே ?

பாற்கடல் - வீட்டிலிருந்து முதல் முதல் புறப்பட்டவர் மஹா விஷ்ணு;
தர்மிணியிடம் விடைபெற்று நீங்கி அயோத்தியில் போய்ப் பிறந்து விட்
. பிறகு மஹா லக்ஷ்மியும் பாற்கடலை விட்டு நீங்கி மிதிலைச் செல்வியாகப்
ந்து விட்டாள். இப்போது ராமன் மிதிலைக்கு வந்ததும் சீதையைக் கண்டா
லவா ? இந்தக் காட்சியைப் 'பிரிந்தவர் கூடியது' என்றே கம்பன் குறிப்
கிறான்.

பாற்கடலில் பிரிந்தவர்கள் மிதிலையில் கூடினார்களாம் :

மருங்கிலா நங்கையும்
வசையில் ஐயனும்
ஒருங்கிய இரண்(டு)உடற்(கு)
உயிர்ஒன்(று), ஆயினர் :
கருங்கடல் பள்ளியில்
கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினால்,
பேசல் வேண்டுமோ ?

166

[மருங்கு — இடை. ஒருங்கிய — ஒற்றுமைப்பட்ட. கலவி—கல
ருத்தல் ; சேர்ந்திருத்தல் ; பிரியாமலிருத்தல்.]

ஸூத்ரமும் பாஷ்யமும்

கண்ணோடு கண் பேசிக் கொண்டதைத் தவிர வேறு பேச்சு நிகழவில்
பேச்சு எதற்கு?

பிரிந்தவர் கூடினால்
பேசல் வேண்டுமோ ?

என்றே கேட்டு விடுகிறான் கவிஞன். இதுவும் ஒரு மகாவாக்கியம் —
காதல் - ஸூத்ரம்.

அண்ணலும் நோக்கினான்,
அவளும் நோக்கினாள்

என்பது போலே. இதற்கும் ஒரு மகா பாஷ்யம் எழுதக் கூடும்.



காதலர்கள் அன்னியரைப் போல் தாங்கள் சந்திக்கவில்லை என்று எண்ணுகிறார்கள்; உணர்கிறார்கள். ஏதோ ஒரு காலத்தில் எங்கேயோ ஓர் இடத்தில் கூடியிருந்த பிரிந்தவர்கள் மீண்டும் சந்திக்கும்போது எத்தகைய உணர்ச்சியை அடைவார்களோ, அத்தகைய உணர்ச்சியைப் புதிதாகச் சந்திக்கும் காதலர்களும் அடையக் கூடும். இந்த உணர்ச்சியை வெளியிடும் கவிஞர்கள், "காதல் என்பது அழிவில்

லாத ஐச்வரியம்;
ணத்தினாலும் பிரி
முடியாதபடி தொ
ந்து வந்து நம்
விட்டு நீங்காத பெ
செல்வம்" என்றெல்
குறிப்பாகவும் வெ
படையாகவும் கூ
தண்டு. இத்தன்

ருத்துக்களைக் குறிப்பாக வெளியிடும் கம்பன், காதலர் காட்சியைப் பிரிந்தவர் ட்டமாகப் பேசுகிறான். ராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் கண்ட மாத்தி த்திலே காதலில் கலந்த உணர்வினராய் 'இரண்டு உடல்களுக்கு ஓர் உயிர்' ான்னும்படி ஒற்றுமைப்பட்டார்கள் என்கிறான்.

இத்தகைய காதலர்களில், காதலியை "மருங்கிலா நங்கை" — இடையில் ாத சீதை (அதாவது அவ்வளவு நுண்ணிய இடையழகு வாய்ந்த சீதை)— என் கிறான். சீதைக்கு 'இடை யில்லை!' என்றதற்கு ஏற்றபடி 'ராமனுக்கும் ஒன்று இல்லை!' என்று குறைகூறத் தொடங்கியது போல் "வசை அல்லது குற்ற மில்லாத ஐயன்" என்கிறான். எவ்வளவு சாதுர்யமாகச் சீதையின் ரூப சௌந் ார்யமும் ராமனது குண ஸௌந்தர்யமும் — முக்கியமாக, வசையில்லாத வீர ஸௌந்தர்யமும்—குறிக்கப் படுகின்றன பாருங்கள்!

அந்தமில்லாத பார்வை!

இத்தகைய காதலர்கள் கண்களால் பேசிக் கொண்டது இவர்களைத் தவிர வேறு ஒருவருக்கும் தெரியாது. சீதையின் தோழிகளுக்கும் தெரியாது; விசு ாமித்திர முனிவருக்கும் லட்சுமணனுக்கும் தெரியாது. இவர்களோடு ராம னும் போய்க் கொண்டுதான் இருக்கிறான். சீதையோ வைத்த கண் வாங் ாமல் அத்யாச்சர்யமாய் ராம சௌந்தர்யத்தைப் பார்த்துக் கொண்டே நிற் கிறாள், அவன் மறை து போகும் வரை.

தோழிகளையும் றந்து விடுகிறாள். ான்? தன் கண்களை இமைக்கவும் மறந்து விட்டாளே!



அந்தமில் நோக்(கு)இமை
அணைகி லாமையால்,
பைந்தொடி ஓவியப்
பாவை போன்றனள்:
சிந்தையும், நிறையும்,மெய்ந்
நலனும் பின்செல,
மைந்தனும் முனியொடு
மறையப் போயினன்.

[அந்தமில் — முடிவில்லாத. பைந்தொடி — பசும் பொன்னாலாகிய வளையையுடைய சீதை. ஓவியப் பாவை — சித்திரப் பதுமை. நிறை — (மனத்தை) நிறுத்தும் ஆற்றல்; மனவுறுதி. மெய்ந்நலன்—உடம்பின் அழகு.]

சீதையின் காதல்-நோக்கை முதல் முதல் 'உண்ணும் நோக்'காகவும் பிறகு 'பருகிய நோக்'காகவும் குறிப்பிட்ட கவிஞன், இப்போது 'அந்தமில்நோக்கு' என்கிறான். காதல்-பசியும், காதல் தாகமும் முடிவில்லாமலே வளர்ந்து விட்டன வெகு விரைவில் என்பது குறிப்பு.

ஆச்சர்யமாகப் பார்க்கும் போது கண்கள் இமைக்காமல் இருந்து விடுகின்றன அல்லவா? ராமனுடைய முடிவில்லாத அழகை, சீதையும் முடிவில்லாத பார்வையாகவே பார்த்துக் கொண்டிருந்தாளாம். அப்போது 'இமைகள் கண்களை அணைத்து கொள்ளவும் மறந்து விட்டன!' என்று எவ்வளவு வசீகரமாகவும் அதிசயமாகவும் அந்த அதிசய நோக்கை வர்ணிக்கிறான் கவிஞன்!

கூடிப் பிரிந்தது!

ராமன் போய்க் கொண்டே யிருக்கிறான் விச்வாமித்திரரோடும் தம்பியோடும். சீதையோ அசைவற்றுக் கண்களும் இமையாத நிலையில் சித்திரப் பதுமை போலவே நின்று விடுகிறாள். இவள் சிந்தையும் மனவுறுதியும்கூட ராமனைத் தொடர்ந்து போகின்றன.

மேனி அழகும் போய் விடுகிறதாம் ராமனோடு. விரக தாபத்தால் அவ்வளவு விரைவாக அழகு மழுங்கத் தொடங்குகிறது என்பது குறிப்பு. இப்படி அழகு ஒருவாறு மழுங்கிய நிலையில்தான் சீதையும் சித்திரப் பதுமை போல் இருக்கிறாளாம். இல்லாவிட்டால் எந்தச் சித்திரப் பதுமையைத்தான் சீதை யென்ற ரூப சித்திரத்திற்கு ஈடாகச் சொல்ல முடியும்?

இயன்றவரை மனத்தை அடக்க முயன்றவள்தான். தன்னடக்கம் என்ற அங்குசத்தால் மனம் என்னும் யானையை அடக்கிக் கொண்டுதான் இருந்தாள். ராமன் தன் கண் பார்வையிலிருந்து மறையும் வரையில் அங்குசத்திற்கும் வெற்றி தான். ஆனால் ராமன் மறைந்ததும் நிகழ்ந்ததென்ன?

பிறையெனும் நுதலவள்
பெண்மை என்படும்?
நறைகமழ் அலங்கலான்
நயன கோசரம்

மறைதலும், மனமெனும்
மத்த யானையின்
நிறையெனும் அங்குசம்
நிமிர்ந்து போயதே!

168

[நுதல் — நெற்றி. நறை — நல்ல வாசனை. அலங்கலான் — பூமாலை
...யுடைய ராமன். கோசரம் — பொறி உணர்வு. மத்த யானை — மத
...னை.]

சீதையின் கண்வட்டத்திலிருந்து ராமன் மறைந்த மாத்திரத்திலேயே இவ
...டைய — காதல் மிகுந்த — மனம் என்ற யானையும் அடங்காது ராமனோடு
...ல்லத் தொடங்கி விட்டதாம். அதை அடக்குவதற்கு 'நிறை' அல்லது மன
...தி என்ற அங்குசத்தை மாட்டி இழுக்கிறாள். பலமாகத்தான் இழுத்துப்
...ர்க்கிறாள். யானையோ அங்குசத்தையும் மீறிப் போகிறதாம். சீதையோ
...ங்குசத்தைக் கைவிடவில்லை. ஆனால் யானை மதயானையாகி அங்குசத்தின்
...ாக்கியை நிமிரச் செய்து தொண்டு நிமிறிப்போய் விடுகிறதாம்.

சீதை என்ன செய்வாள், பாவம்! மின்னல் - ராணியை மின்னற்கொடி
...ன்ற விசிறுவதுபோல் விசிறிக்கொண்டிருக்கிறாள் தோழி.

பிரிந்தவர் கூடிய இன்பத்தைப் பேச முடியுமோ என்றான் கவிஞன்.
...ரிந்தவர் கூடிப் பிரிந்த துன்பத்தைத்தான் பேச முடியுமா?

13.1.



பி. ஸ்ரீ.

49. ‘கண்வழிப் புகுந்த காதல்’

வில்லை முறித்த பின்பே ராமன் சீதையைக் கண்டதாக ஆதி ராமாயண ாகிய வால்மீகி ராமாயணம் சொல்லுகிறது. சீதையைக் கண்டு காதலித்த ன்பே ராமன் வில்லை முறித்ததாகக் கம்ப ராமாயணம் சொல்லுகிறது. இந்த றுதல் கம்பனுக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் வட நாட்டிலே தோன்றிய ளஸீ ராமாயணத்திலும் காணப்படுகிறது. தமிழ் நாட்டுச் சிவநேசர்களில் ருவரான குமர குருபர சுவாமிகள் காசியில் ஹிந்தியிலே செய்த கம்ப ராமா ண உபந்யாஸங்கள் மூலமாகத் துளஸீதாஸர் கம்பன் கருத்துக்களை ஒருவாறு றிந்திருந்தார் என்பது நம் தமிழ் நாட்டிலே பிரசித்தமாக வழங்கும் ஒரு கர்ண ரம்பரை வரலாறு.

சீதா ராமர்களின் காதலைப் பற்றிய கற்பனை கம்பனுக்கு முன்பும் தமிழ் ட்டில் வழங்கி வந்ததுதான். பக்த மணியாகிய திருமங்கை யாழ்வாரும் இக் தலைப் பிரஸ்தாபிக்கிறார் என்றால், சீதா ராமர்களின் காதல் - கதை இந் ட்டிலே எவ்வளவு பிரஸித்தமாக வழங்கி வந்திருக்க வேண்டும்! ஆழ்வார் ளுக்கும் முன்பே இக்கதை தமிழர்களால் கற்பனை செய்யப்பட்டிருக்க வேண் ம். பழைய சங்க காலத்துப் புலவர்கள் காதலையும் வீரத்தையுமே பெரும்பா ம் பாடி யிருக்கிறார்களல்லவா? ராமபிரானது வீர சரித்திரத்திலும் காதல் - ட்சி அவசியமென்றே கருதி விட்டது தமிழர் கவியுள்ளம். இக் கவிதை யுள் த்தின் சிகரமென்று சொல்லத் தக்க கம்பனும் பழைய தமிழ் மரபை ஒட்டித் னுடைய ராமாயணத்திலும் இக் காதல் - காட்சியை அமைக்க முற்பட்டான் ன்று ஊகிக்கலாம்.

எனினும் கம்ப சித்திரத்திலே வரும் காதல் - காட்சி ஒரு புதிய சிருஷ்டி. தா ராமர்களின் காதலிலிருந்து அவர்களுடைய குணாதிசயம் வளர்ந்தோங்குவ தச் சித்திரிக்கும் கம்பன் தனது ராமாயணத்தையே இக் காதலின் வெற்றி க்கி விடுகிறான். இதற்காகவே சீதா கல்யாணத்தின் பூர்வாங்கமாக்குகிறான் தா ராமர்களின் காதல் - காட்சியை. இது கம்ப ராமாயணத்தின் கட்டுக் கோப்பு - மர்மங்களில் ஒன்று.

ராமன் வீதி வழியே போய் மறைந்ததும், சீதையின் உள்ளம் விவேகத்துக்குக் கட்டுப்பட வில்லை. இந்தக் காதல் - நோய்—கண் வழியே புகுந்த உடம்பெங்கும் பரவி விட்டதாம், — பாலில் புகுந்த பிரை என்ற மோர்த்துளி போலே:

மாலுற வருதலும்,
    மனமும் மெய்யும்தன்
நூலுறு மருங்குல்போல்
    நுடங்கு வாள்நெடுங்
காலுறு கண்வழிப்
    புகுந்த காதல்நோய்
பாலுறு பிரையெனப்
    பரந்த தெங்குமே. 169


[மால்—ஆசை. உற—மிகுதியாக. நூலுற—நூல் போன்ற. மருங்குல்—இடை. நுடங்குவாள் — நுட்பமாகி வாடுவாள். காலுறு — வழியாக உற்ற. பிரை — பாலை உறையச் செய்யும் மோர்த்துளி.]

எரியும் நெருப்பில் விறகும் விழுந்தது!

இந்த நோயைத் தன்னுடன் நெருங்கிப் பழகும் தோழிமாரிடம் சொல்லவும் சங்கோசம். ஊமை போல் மனத்திற்குள் எண்ணி எண்ணி விம்முகிறாளாம். எரியும் தீயில் விறகும் வந்து விழுகிறதாம். எப்படி என்று பார்க்கலாம்:

ஊமரின் மனத்திடை
    உன்னி விம்முவாள்;
காமனும் ஒருசரம்
    கருத்தில் எய்தனன், 170
வேம்எரி அதனிடை
    விறகிட் டென்னவே!

[ஊமரின்—ஊமைகள் போலே. உன்னி—எண்ணி. காமன் — மன்மதன். சரம்—அம்பு. வேம் எரி—எரிந்து வெந்துபோகச் செய்யும் நெருப்பு.]



என்ன காமாவேசம், என்ன காமாக்னி! மத பாணம், எரியும் நெருப்புக்கு விறகு போல் ந்ததாம்.

ம்பு பட்ட மயில்போல் விழுந்தாள்!



தோழிமார் சீதையை மெல்ல அழைத்துக் ண்டு போய்ப் படுக்கையில் சேர்க்கிறார்கள். பூக் பரப்பிய படுக்கையில் அப்படியே சாய்ந்து விடு ள். "பூக்களின் மேல் சாய்ந்து கிடக்கும் பூங் டி போல" என்று சொன்னால் சரியாகுமா? னலில் வெதும்பும் மென்மையான பூங்கொம்பு லே" என்று சொன்னால் மாத்திரம் இப்போது இருக்கும் நிலையைச் சொன்னதாகுமா? எடுத்த ப்பிலே கவிஞன் இப்போது உபயோகிக்கும் உவ யைப் பாருங்கள் :

கம்பமில் கொடுமனக்
கான வேடன்கை
அம்பொடு சோர்வுறூஉ
மயிலும் அன்னவள்,
வெம்புறு மனத்(து) அனல்
வெதுப்ப, மென்மலர்க் 171
கொம்பென, அமளியில்
குழைந்து சாய்ந்தனள்.

[கம்பம் — கலக்கம். இல் — இல்லாத. கம்பமில் — (இங்கே) ரக்கம் இரக்கமில்லாத. அன்னவள் — போன்றவள். வெம்புறு — வெம்ப மிகுந்த. மனத்து — மனத்திலே. மலர்க் கொம்பென — பூங்கிளையைப் ல. அமளி — படுக்கை.]

ஒரு காடு. மயில் ஆடிக் கொண்டிருக்கிறது உத்ஸாகமாக. பார்த்துக் ண்டிருக்கிறான் வேடன். ஆட்டத்தையும் அந்த அழகையும் ரஸித்துத் ? அதற்குக் கண்ணில்லை, இரக்கத்திற்கு நெஞ்சமில்லை, பாவி வேட கு! கையும் நடுங்கவில்லை. அந்தக் கையிலிருந்து விடுபட்ட அம்பு குறி து அந்த மயிலை அடித்துச் சோர்ந்து விழச் செய்து விடுகிறது. அப்படி கிறாளாம் சீதை படுக்கை மீது.

'உருகு பொற் பாவையும் ஒத்து'

தோழிமார் ஆலவட்டம் என்ற பெரு விசிறி கொண்டு வீசிக்கொண்டு இருக்கிறார்கள், சைத்யோபசாரமாக. இந்த விசிறிக் காற்றும் காமாக் யை விசிறி ஜ்வாலை செய்து விடுகிறதாம். இப்போது சீதை நெருப்பில் க் கொண்டிருக்கும் தங்கப் பதுமை போலத் தோன்றுகிறாளாம் :

அருகில்நின்(று) அசைக்கின்ற
ஆல வட்டக்கால்
எரியினை மிகுத்திட,
இழையும் மாலையும் 172
கரிகுவ தீகுவ,
கனல்வ காட்டலால்,
உருகுபொற் பாவையும்
ஒத்துத் தோன்றினாள்.

[ஆலவட்டம் — பெரு விசிறி. கால் — காற்று. இழை — ஆபர
பாவை — பதுமை.]

காம பரவசமாய் இருக்கும் சீதையின் நிலைதான் எத்தனை உபமானங்க
நம் கண்முன் சித்திரிக்கப்படுகிறது! இவற்றுக்கெல்லாம் சிகரமாக இருக்கிற

உருகுபொற் பாவையும்
ஒத்துத் தோன்றினாள்

என்பது.

ராமன் போவதைக் கண் இமைக்காமல் அதிசயமாய்ப் பார்த்
கொண்டே, தன் உள்ளத்தையும் உறுதியையும், அழகையும் கூட அவன் பின்
போக்கி நின்ற சீதையை "ஓவியப் பாவை போன்றனள்" என்று வர்ணி
கவிஞன், காமாக்கினியில் உருகிக்கொண்டிருக்கும் காதலியை "உருகுபெ
பாவை" என்று காட்டுவது எவ்வளவு பொருத்தமானது!

வில்லொடும் இறங்கிய மேகம்

இந்த நிலையில் சீதையின் வாய் ஏதேதோ பிதற்றத் தொடங்குகிறது
இருள் என்றும், பூமாலை யென்றும், காடென்றும், தூணென்றும், மரகதக்
என்றும், தாமரை என்றும், மேகமென்றும், இந்திர வில்லென்றும் பிதற்
தெல்லாம் காதலனைச் சுற்றிச் சுற்றி வட்டமிடும் நினைவுகள் தான், காதலனை
தேடித் தவிக்கும் உள்ளம் தான்:

அல்லினை வகுத்ததோர்
அலங்கல் - காடெனும்;
வல்எழு அல்லவேல்,
மரக தப்பெருங்
கல்லெனும் இருபுயம்;
கமலம் கண்ணெனும்;
வில்லொடும் இழிந்ததோர்
மேகம் என்னுமால்.


173

[அல் — இருள். அலங்கல் — பூமாலை. வல் — வலிய. எழு
தூண். அல்லவேல் — அல்ல என்றால். இழிந்தது — இறங்கினது.]

"இருளைக்கொண்டு வகுத்த ஒரு பூமாலைக் காடு" என்கிறாள், நீல ஜே
யரிய ராமன் அடர்ந்த மயிர்முடியில் பூமாலை சூடிப் போய்க்கொண்டிரு
அந்த அழகை எண்ணி எண்ணி. உடனே அந்த வீரத் தோள்களின் அழ
தோன்றுகிறது மனக்கண் முன்பு. "திரண்டு உருண்டு பருத்து உயர்ந்த
தோள்கள் தான் எவ்வளவு வலியனவாய் இருக்கவேண்டும்!" என்று எண்
யதும், "அவற்றை வலிமை வாய்ந்த தூண்களோடு ஒப்பிடலாமா?" என்
நினைத்துப் பார்க்கிறாள். உடனே அந்த உபமானம் சரியில்லை யென்று அ
அழகு சுமந்த இரு புயங்களையும் "மரகதப் பெருங்கல்" என்று ஆசையோ
சொல்லிப் பார்க்கிறாள்.

பிறகு தனக்கு நோய் தந்த கண்களையும் நினைத்துப் பார்க்கிறாள்; ஆ
யோடு 'தாமரைக் கண்கள்' என்கிறாள். அப்பால், கோதண்டமும் கையுமா
அவன் தன் கண்வட்டத்தில் வந்து போனதை நினைத்து, "இந்த அழகனுக்
இம் மண்ணுலகத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்?" என்
நினைத்து, "வான மண்டலத்திலிருந்து இந்திர வில்லோடு நழுவி வந்த ஏ
ஒரு அதிசய நீல மேகம் தானோ?" என்று ஆச்சரியப் படுகிறாள்.

வீதி வழியே போன ராமன், இப்படி யெல்லாம் பிதற்றிக் கொண்டி
கும் சீதையின் மன வீதி வழியாகப் போவதும் வருவதும் மறுபடியும் போவ
மாகவே இருக்கிறான்!



 பி. ஸ்ரீ.

50. சாயங்காலமும் சந்திரோதயமும்

134

“ அந்த வீரன் உண்மையில் வீரன் இல்லை ; கள்ளன்தான் !” என்று
...ம் சாட்டுகிறாள் திடீரென்று :

பெண்வழி நலனொடும்,
பிறந்த நாணொடும்,
என்வழி உணர்வும், நான்
எங்கும் காண்கிலேன் !
மண்வழி நடந்(து) அடி
வருந்தப் போனவன்,
கண்வழி நுழையும்ஓர்
கள்வ னேகொலாம் ?

174

[பெண் வழி நலன் — பெண்களுக்கு வழி வழியாக வரும் நலன்கள்.
— வெட்கம். எண் — எண்ணம்.]

“ ஆம், கள்ளன்தான் ! மண் வழியே நடந்து போவது போல் பாசாங்கு
...து, என் கண் வழியே நுழைந்து போனான்: பக்காத் திருடன் ! அவன்
... போனதும் என் பெண்மையின் நலன்களைக் காணவில்லை ; பெண்மை
... பிறந்த நாணத்தையும் காணவில்லை: ஐயோ, என் பகுத்தறிவையும் காண
...லையே ! எங்கும் தேடிப் பார்த்தும் காணவில்லையே ! ஆகையால் அந்தக்
...ன்தான் களவாடிப் போயிருக்க வேண்டும் !” என்று குற்றப் பத்திரிகை
...கிறாள். “ அவன் வந்து போனான் : சில வைர நகைகளைக் காணவில்லை ;
...ப் பாத்திரத்தைக் காணவில்லை ; அந்தச் சாதாரண வெள்ளி டம்ளரையும்
... வில்லையே ! அந்த ஆசாமி பக்காத் திருடன்தான் !” என்று பேசுவது
... பேசுகிறாள் சீதை.

“ அந்தக் கள்ளனா ? கதவைத் திறந்தோ, உடைத்தோதான் போக
...ண்டுமென்பதில்லை ; கன்னம் வைத்துப் போக வேண்டுமென்பதும் இல்லை ;
...த்தின் வழியாகவே நுழைந்து விடுவான் !” என்று சொல்வதுண்டல்
...? அப்படியே சீதையும் ராமனை,

கண்வழி நுழையும்ஓர்
கள்வ னேகொலாம்?

என்று சந்தேகிக்கிறாள்.

விசித்திரக் கள்ளன்

அப்படியானால் இந்தக் கள்ளன் விஷயமாகச் சீதைக்குக் கோ உண்டா? வருத்தம் உண்டா? இல்லை; அனுதாபம்தான், இரக்கம்தான்!

மண்வழி நடந்(து) அடி
வருந்தப் போனவன்

என்றுதான் வருந்துகிறாள். "பூமேல் நடவாமல் மண் மேல் நடந்தானே என்றுதான் வருத்தம்.

உண்மையில் அந்த அடிகளை மண்மேல் நடக்க விடாமல் தன் இ மாகிய பூவினாலே தாங்கிக் கொண்டாளாம். எனவே அந்த நடை இ உள்ளத்திலேயே கிடக்கிறதாம், எப்போதும் நீங்காமலே:

நடந்தது கிடந்த(து)என்
உள்ளம் நண்ணியே.

[நண்ணி—(நீங்காத)பொருந் என்ன விசித்திர நினைவு! எ விசித்திரக் கள்ளன்!



உயிரையும் உண்டது!


"இப்படி இவள் உள் தைக் களவாடிய மேனி ய இவள் கண் முன் வருகிறது படியும் படிப்படியாக. முதலரவ மயிர் முடியோடு முக மண்ட தோன்றுகிறது நீல ரத்தின யோடு கூடிய சந்திர பிம் போலே. அந்த முகத்திலே தவ புன்சிரிப்பு இவள் உயிரை படியே உண்டு விட்டதாம்:

இந்திர நீலம்ஒத்(து)
இருண்ட குஞ்சியும்
சந்திர வதனமும்,
தாழ்ந்த கைகளும்
சுந்தர மணிவரைத்
தோளு மே அல:
முந்திஎன் உயிரைஅம்
முறுவல் உண்டதே

[குஞ்சி—மயிர்முடி. வ மலை. முறுவல்—புன்சிரிப்பு.]

அந்தப் புன்சிரிப்பின் வசீ தை இந்தப் பாட்டில் நாமும் படியோ பார்த்து விடுகிறோம். துசைச் சித்திரத்தில் சீதை 'மழலை'யே காதில் விழுவதுபோ இருக்கிறது.

கோட்டையையும் பிடித்தது !



அந்தப் புன்சிரிப்ப மட்டுமா ?
...டமக் தணிந்து தன் 'கன்னி
...மதிலை' (கன்னித் தன்மையா
கோட்டையை) ஜயித்துப்
...த்துச் கொண்ட பலாத்காரமும்
...ளவோ வசீகரமாகவே இருக்
...து ;

...றந்(து)உடை நலம்நிறை
பிணித்த எந்திரம்,
...ங்குபு திரியும்என்
கன்னி மாமதில்
எறிந்தஅக் குமரனை,
- இன்னும் கண்ணில்கண்(டு) 175
அறிந்(து),உயிர் இழக்கவும்
ஆகுமே கொலாம் ? 135

[பிறந்து உடை — என்னுடன் பிறந்து என் உடைமையாக உள்ள. ...றை — மன உறுதி. பிணித்த — கட்டிய. கறங்குபு—சுழன்று. எறிந்த— ...கே) வென்று பிடித்துக்கொண்ட. ஆகுமே — (இங்கே) ஆகுமோ.]

சீதையின் ஹிருதயக் கோட்டையாகிய கன்னிமதிலை யந்திரங்கள் பல ...ல் செய்து கொண்டிருக்கின்றனவாம். மன வுறுதி என்று ஒரு யந்திரம், ...ண்மைக் குணங்கள் என்று வேறு பல யந்திரங்கள். இவை யெல்லாம் எப் ...ழும் சுழன்று எவரும் அணுகாதபடி கன்னி - மதிலைக் காவல் செய்கின்றன ... இவ்வளவு பந்தோபஸ்தான கோட்டையை எறிந்து வென்ற அந்தக் ...னை இன்னும் ஒரு முறையாவது கண்ணாலே பார்க்க வேண்டுமென்று ...சைப் படுகிறாள் சீதை.

ஆம், வெல்லப்பட்ட அந்தக் கன்னி - உள்ளமே ஆசைப்படுகிறது, தன்னை ...ன்ற அந்த வெற்றிவீரனை ஒரு முறையாவது காணவேணும், கண்டு அறி ...கொள்ள வேணும் என்று. கண்டு அறிந்த பின்பு உயிர் போவதானாலும் சங் ...டம் தானும். "அத்தகைய பாக்கியமும் எனக்குக் கிடைக்குமோ?" ...று ஏங்குகிறது சீதையின் உள்ளம்.

மாலைப் பொழுது

இப்படிப் பலவிதமாக எண்ணி எண்ணிச் சீதை மனம் உருகிக்கொண் ...க்கும்போது, "அது என்ன? காதலன் வருவதற்கு மாறாக யமனே வந்து ...டானே? சீதை ஒரு நடுக்கம் நடுங்குகிறாள். ஆனால் மாலைப் பொழுது ... அப்படி வந்துவிட்டது.

அந்தி மயங்க மயங்கச் சீதையின் மயக்கமும் அதிகரிக்கிறது ;

ஆலம் உலகில் பரந்ததுவோ ?
ஆழி கிளர்ந்த தோ ? அவர்தம் 176
நீல நிறத்தை எல்லோரும்
நினைக்க அதுவாய் நிரம்பியதோ !

காலன் நிறத்தை அஞ்சனத்தில்
கலந்து குழைத்துக் காயத்தின்
மேலும் நிலத்தும் மெழுகியதோ?
விளங்கும் இருளாய் விளைந்ததுவே!

[ஆலம் — ஆலகால விஷம். ஆழி — சமுத்திரம். கிளர்ந்ததோ — பொங்கிவிட்டதோ. அஞ்சனம் — மை. காயம் — ஆகாயம்.]

" ஆலகால விஷமே மறுபடியும் உலகமெங்கும் பரவி வந்துவிட்டதோ? அல்லது கருங்கடல் தான் இப்படிப் பொங்கி எங்கும் பெருகி வருகிறதோ?" என்று அந்த இருளை நோக்கித் திகைத்துப் போகிறாள், திடுக்கிட்டுப் போகிறாள். இந்தத் திகைப்பிலும் பயத்திலும் எண்ணுவதெல்லாம் எண்ணி விடுகிறாளாம். கண்ணுக்கு இடம் மையைக் குழைத்து எங்கும் பூசியது போல் இருக்கிறது இருட்டு என்று சாதாரணமாய்ச் சொல்வதுண்டல்லவா? இப்போது உள்ள சீதையின் மன நிலையில், " இந்த மையோடு யமனுடைய கரு நிறத்தையும் கலந்து குழைத்து ஆகாயத்தின் மேலும் நிலத்தின் மேலும் பூசி மெழுகி விட்டார்களோ?" என்றெல்லாம் எவ்வளவோ விபரீதமாகவும் விநோதமாகவும் தோன்றுகிறதாம்.

இந்த நினைவுகளுக்கிடையே, பொறுமை கலந்த வேறொரு நினைவும் கூட :—" அவர்தம்—நீல நிறத்தை எல்லோரும் நினைக்க, அதுவாய் நிரம்பியதோ?" தன்னைப்போல் எல்லாரும் ஒரே பைத்தியமாய் அந்த நீல நிறத்திலேயே ஏகாக்ரசித்தமாக, அந்த நிறம் அப்படியே உலகமெங்கும் நிரம்பிப் பரவி விட்டதோ? — என்கிறாள். 'மாஸ் ஹிப்னாடிஸம்' (Mass Hypnotism) என்கிறார்களே, அந்த வச்ய நித்திரைக்கு உட்பட்டு விட்டதோ உலகமெல்லாம்? — என்று கருதுகிறாள்.

* * * *

சந்திரோதயம் ஆகிறது. சீதை எழுந்து போய்ச் சந்திரனைப் பார்க்கிறாள்.